Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu
www.nimirvu.org


பார்வை – 34 கார்த்திகை, 2019 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00



## வல்லரசுகளின் இலக்குகளை தோற்கடிக்கும் தமிழ் பொது வேட்பாளர்



# தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ் பொது வேட்பாளர்



## 2019 ஜனாதிபதி தேர்தல்: ஆள்மாற்றமே தவிர அரசியல் மாற்றம் இல்லை



## இருட்டறைக்குள் கறுப்புப் பூனை

– ஆராயும் அறிவே நிமிர்வு –

# வல்லரசுகளின் இலக்குகளை தோற்கடிக்கும் தமிழ் பொது வேட்பாளர்




தொகுப்பு :- அமுது

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் "ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு, ஏன், எதற்காக, தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்" எனும் தொனிப் பொருளிலான மக்கள் மன்றம் யாழ் பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையரங்கத்தில் 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மேற்படி இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற இம்மக்கள் மன்றத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியற்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உரையாற்றியிருந்தனர். அதில் பங்கேற்று யாழ் பல்கலைக் கழகத்தின் அரசறிவியற் துறை தலைவரான பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம் ஆற்றிய உரை வருமாறு,

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவில் அமைப்புக்கள் சார்பில் நிறைய அம்சங்களோடு தொடர்புபட்ட விடயங்களோடு இந்த அரங்கில் சில பதிவுகளை செய்ய விரும்புகின்றேன். என்னுடைய பதிவுகள் சற்று வேறுபட்டது. சிவகரனுடைய அழைப்பில் அழகான வாசகம் இடப்பட்டிருந்தது. லெனினின் வாசகம் "அரசியலில் நீங்கள் தலையிடவில்லை என்றால் அது உங்கள் வாழ்க்கையில் தலையிடும்" என்று. நானும் அதையே தான் நினைக்கிறேன்.

இந்த தேர்தல் என்பது தமிழர்களுக்கு ஒரு அறிவுபூர்வமான புத்திபூர்வமான தேர்தல். தமிழர்களிடம் ஆயுதம் முடிந்து போய்விட்டது. மிதவாதத்தின் எச்ச சொச்சங்கள் எங்களிடம் இருக்கின்றன. அதுகூட மிகப் பலமாக இல்லை. பலவீனமாகத்தான் இருக்கின்றது. எங்களிடம் இருக்கின்ற கேள்வி, அறிவுசார்ந்த எண்ணத்துக்குள் இந்தத் தேர்தலை நாம் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தான். இரண்டு விடயங்கள் இருக்கின்றன. விசுவாசமாக சொன்னால் முதலாவதாக ஒரு விடயத்தை முதன்மைப்படுத்தினோம். அது பொதுவேட்பாளர். இரண்டாவது 13 அம்சக்கோரிக்கைகள் என்ற விடயத்தை நாங்கள் முன்னிறுத்தினோம் தந்தோம். அது தென்னிலங்கைக்கு போய் வந்த பிற்பாடு தோற்று விட்டதாக பலர் நினைக்கின்றார்கள். உண்மையில் இரண்டும் தோற்கவில்லை என்பது எனது வாதம்.

இந்தோபசுபிக் என்ற உபாயத்திலிருந்தும் ஒரே சுற்று ஒரே பாதை என்கிற தளத்தில் இருந்தும் தான் இந்தத் தேர்தலை பார்க்கின்றோம். இந்தத் தளங்களைக் கையாளுகின்ற வல்லமை உபாயம் தமிழ் மக்களுக்கு உண்டு. தமிழ் மக்களின் வாக்குகளுக்கு உண்டு. தமிழ் மக்களுடைய இருப்புக்கள் இதனூடாக நகர்த்தப்படக்கூடிய ஒரு காலப்பகுதியில் இப்போது இருக்கின்றோம்.

## "தென்னிலங்கையை கையாளுகின்ற சக்திகளை நாம் கையாளவில்லை"

நிறையக் கேள்விகள் கேட்பதனால் நிறைய அரசியல் கட்சிகள் எங்களிடம் வந்திருக் கின்றன. ஒரு காலத்தில் யூதர்களைப் பார்த்துச் சொன்னார்களாம். 4 பேர் இருந்தால் 5 கட்சிகளை உருவாக்குவார்கள் என்று. அதே போல நாங்கள் 5 பேர் இருந்தால் 10 கட்சிகளை உருவாக் கும் நிலைக்கு வந்துவிட்டோம். இத்தனைக்கும் நாங்கள் வெறும் ஒரு சிறிய தேசிய இனம். இந்த ஆறு பேரையும் ஒன்றிணைக்கப் செய்வதும் தொடர்ந்து அவர்களை பயணிக்கச் செய்வதும் எங்களுடைய அவா. இதனை நிறைவு செய்யாமல் தடங்கல் செய்வதற்கும் தென்னிலங்கையில் நிறையத் தளங்கள் இயங்குகின்றன. அந்த இயங்குதிறனைக் கடந்து போவதற்கு இந்த அரங்கும் இந்த அரங்கின் உரைகளும் சரியாக அமையக்கூடும்.

வாக்களிப்பவர்கள் அதனோடு சேர்ந்திருப் பவர்கள் ஒன்றித்து பயணிப்பவர்கள் அனை வரையும் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். சிறிய தேசிய இனம் பல்வேறு நெருக்கடிக்குள் வந்து விட்டது. செம்மலை நிலைமை நல்லூருக்கு வருவதற்கும் அதிக காலம் எடுக்காது என நான் நினைக்கின்றேன். ஓரளவுக்காவது அறிவுபூர் வமாக செயற்பட வேண்டும்.

நாங்களோ இன்னும் புராதன இயல்புகளுக்குள்ளும் பண்புகளுக்குள்ளும் இருக்கின்றோம். அதற்காக நான் அந்த மரபு களை நிராகரிக்க வேண்டும் என்று கூற வில்லை. அந்த நிராகரிப்புக்குள் இருக்க வேண்டிய அனைத்து அம்சங்களையும் உள்வாங்கக் கூடிய ஒரு சூழலுக்குள் எங்களுடைய தேர்தல் விடயங்களும் தேர்தல் அவதானிப்புக்களும் அதனுடைய தீர்மானங்களும் அமைய வேண்டும். கட்சிகளின் கொள்கைகள் யாருக்காக என்று கேட்டால் மக்களுக்காக என்பார்கள். கொள்கைக் காக என்பது நியாயப்பாட்டுக்கான ஒரு விடயம். அந்த கொள்கையை நடைமுறை சார்ந்து எவ்வாறு கையாள்வது என்பது பற்றி உரையாடல் செய் வதனூடாக ஒரு தமிழ் சமூகத்தினுடைய அல்லது தமிழ் தேசிய இனத்தினுடைய இருப்புக் களை பற்றி சிந்தியுங்களேன் என்றே கேட்கி றேன். தற்போதைய சூழ்நிலைக்கு தனித்து தமிழ் தேசிய கூட்டமைப்போ தென்னிலங்கையில் இருக்கும் சக்திகளோ மட்டும் காரணம் இல்லை.

**"சிவாஜிலிங்கம் மீன் சின்னத்தில் பொதுவேட்பாளராக தேர்தலில் நிற்கின்றார். தேசியத்திற்காக தேசிய இருப்பிற்காக பொதுவேட்பாளராக நிற்கின்றார். வாக்குகள் எடுத்து பாராளுமன்றத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை. என்னுடைய அபிப்பிராயம் இங்கே மீன் சின்னம் தான் பொதுவேட்பாளர். அது தமிழருக்கான சின்னம். தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்"**

இந்தத் தேர்தல் தென்னிலங்கையின் தேர்தல் என்பது உண்மை தான். தென்னிலங் கையை கையாளுகின்ற சக்திகளை நாம் கையாளவில்லை. சிங்கள வேட்பாளர்களோடு, தமிழ் வேட்பாளர்களோடு, தமிழ் அரசியற்கட்சித் தலைவர்களோடு, புத்திஜீவிகளோடு கருத்திய லாளர்களோடு தூதுவர்கள் தனித்தனியே உரையாடியிருக்கின்றார்கள். தூதரங்கள் நிறைய விடயங்களை பகிர்ந்திருக்கின்றன. தங்களு டைய இலக்குகளை நாங்கள் தோற்கடிக்க முயற்சிக்கின்றோம் என்பதனை வெளிப்படை யாகவே சொல்லியிருக்கிறார்கள்.

இவை எல்லாமே 13 அம்சக்கோரிக் கைகளுக்கும் பொதுவேட்பாளர்களுக்கும் ஒரு வாய்ப்பான விடயம். நாங்கள் பொதுவேட் பாளர்களைத் தேடினோம். சாத்தியமாகவில்லை. சிவாஜிலிங்கம் மீன் சின்னத்தில் பொதுவேட் பாளராக தேர்தலில் நிற்கின்றார். தேசியத்திற் காக தேசிய இருப்பிற்காக பொதுவேட்பாளராக நிற்கின்றார். வாக்குகள் எடுத்து பாராளுமன்றத் திற்கு போகவேண்டிய அவசியமில்லை. என்னு டைய அபிப்பிராயம் இங்கே மீன் சின்னம் தான் பொதுவேட்பாளர். அது தமிழருக்கான சின்னம். தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ●

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# தமிழ் மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பாக இத்தேர்தலை மாற்றுவோம்

"ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு, ஏன், எதற்காக, தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்" என்பதைப் பற்றி விவாதிக்க தமிழ் அரசியற் கட்சி களின் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர் கள் பங்கேற்ற மக்கள் மன்றம் 03.11.2019 ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இந்நிகழ்வில் பங்குபற்றி இருந்தன. அதில் பங்கேற்ற கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி தேர்தல் குறித்து இரண்டு நிலைப்பாடுகளை கூறினர். ஒன்று தேர்தலை புறக்கணிப்பது, இரண்டாவது தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது.

ஆனால், துரதிஷ்டவசமாக கட்சிகளில் அங்கம் வகிப்பவர்களும் சரி புத்திஜீவிகளும் சரி நேரடியாக தமிழ் வேட்பாளரை ஆதரிப்ப தனைத் தவிர்த்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அனைத்து கட்சிகளும் "தமிழ் மக்கள் தாம் விரும்புபவர்களுக்கு வாக்களிக் கலாம்" என்று கூறி தமது "வரலாற்றுக் கடமையை முடித்துக் கொண்டார்கள். தமிழ் மக்களை அரசியல் ரீதியாக வழிநடத்துவதற்காக கட்சி களை ஆரம்பித்ததாகச் சொல்லிக்கொள்ளும் இவர்கள் மக்களையே அந்த முடிவை எடுக்கச் சொல்லுவார்களாயின் இக்கட்சிகளின் இருப்புக் கான தேவை என்ன? அரசியலில் இவர்களின் பொறுப்புத்தான் என்ன?

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஐந்து தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 கோரிக்கைகளையும் பிரதான சிங்கள வேட்பாளர்களிடம் வழங்குவதாக உறுதியளித்த சுமந்திரன் பின்னர் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறித்த கோரிக்கைகளை சிங்கள வேட் பாளர்களிடம் வழங்கவில்லை, ஆனாலும் சஜித்துக்கே ஆதரவு என நேரடியாகவே கூறினார். ஏலவே 13 தீர்மான வரைபில் ஒப்பமிட்ட கூட்டுக் கட்சிகளைக் கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல், அங்கத்துவக் கட்சிகளின் ஆதரவையும் கூடக் கோராமல் மீண்டும் ஒருமுறை தமிழரசுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவை ஐ.தே.கவுக்கு வழங்கி யுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு காலத்தில் நடைபெறும் இந்த தேர்தலில் கூட தமது கட்சி நலன்களை கைவிட்டு ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைய முடியாத தமிழ்க் கட்சிகள் எமக்குத் தேவையா என்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தருணம் இது.

தேர்தலைப் புறக்கணிக்கக் கோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கும் வாதம், புறக்கணிக்கும் அரசியல் என்பதே விடுதலை அரசியல் என்கிறது. இது சிங்கள மக்களின் தேர்தல், இதனால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை, ஆகவே இதனைப் புறக்கணிப்போம் என்பதுவே அவர்கள் நிலைப்பாடு. அப்படியான புறக்கணிப்பு தமிழர்களின் உரிமைகளை வென் றெடுப்பதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தில் வகிக்கும் பாத்திரம் என்ன என்பது தொடர்பாக அவர்களிடம் எந்தவித தெளிவும் இல்லை.

ஏற்கனவே தமிழ் மக்களின் தேர்தல் புறக் கணிப்பு பலன் எதையும் தரவில்லை. இந்த தந்திரத்தை நாம் கையாண்டு தோற்றுப் போயிருக் கிறோம். இன்றைய சர்வதேச அரசியற் சூழலில் புறக்கணிப்பு என்பது எம்மை தனிமைப்படுத்தும். நாம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ எம் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் ஒரு தேர்தலை எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றி சிந்திப்பதே தந்திரோபாயமானது.

சிவாஜிலிங்கம் என்ற தனிமனிதன் தமது கட்சிகளை விட பிரபலமடைவதா என்ற பொறாமை கூட இக்கட்சிகளின் இவ்வாறான பொறுப்பற்ற தன்மைக்கு காரணமா என எண்ணத் தோன்று கிறது. இங்கே போட்டியிடுவது சிவாஜிலிங்கம் அல்ல. இன்னும் சொல்லப் போனால் இங்கு போட்டியிடுவது மீன் சின்னம் தான். அதனைக் குறியீடாக கொண்டு தமிழ் மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பாக இத்தேர்தலை பயன்படுத்தி தெற்குக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியைச் சொல்வோம். அதாவது தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் ஒன்றையே செய்து கொண்டிருக்கும் அரசியலைத் தாண்டி ஒரு புதிய வெகுசன அரசியல் நடவடிக்கைக்குத் தயாராகி விட்டார்கள் என்ற செய்தியை சொல்வோம்.

- செ. கிரிசாந் -

# தமிழ்த் தேசியத்தின் குறியீடாக என்னைப் பாருங்கள்

**"கூடியளவு தமிழ்க் கட்சிகளிடம் இருந்து ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்குவது தான் எங்கள் நோக்கம். தனிமரம் தோப்பாகாது"**



-தொகுப்பு : துருவன் -

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஆரம்பகால உறுப்பினரும், மக்கள் போராட்டங்களில் தொடர்ந்து துணிவுடன் குரல் கொடுத்து வருபவருமான எம்.கே சிவாஜிலிங்கம் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக மீன் சின்னத்தில் களம் காண்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியமை குறித்து அவரே விளக்குகிறார், 2019 ஆம் ஆண்டுக் கான ஜனாதிபதி பொதுத் தேர்தல் கார்த்திகை மாதம் நிர்ணயிக்கப்படலாம் என கடந்த சில மாதங் களுக்கு முன்னர் இருந்தே பேச்சுக்கள் அடிபட்டு வந்த சூழ்நிலையிலே புரட்டாதி மாதம் 18 ஆம் திகதியளவில் நியமன பத்திர ங்கள் உத்தியோக பூர்வமாக கோரப்பட்டன. கட்டுப்பணம் செலுத்த வேண்டிய இறுதித் திகதி ஐப்பசி மாதம் 6 ஆம் திகதி நண்பகல் வரை என்றும் நியமனப் பத்திரங்களை 7 ஆம் திகதி 9 – 11 மணிவரை தாக்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இவையெல்லாம் முன்னரே அறிவிக்கப்பட்ட சூழலில் நான் இலங்கையில் இருக்கவில்லை. நான் இலங்கையில் இருந்து ஐப்பசி மாதம் 8 ஆம் திகதி புறப்பட்டு லண்டனில் நோய்வாய்ப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த எனது சகோதரரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவரைப் பார்த்து விட்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்தேன். அங்கு தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் பொது அமைப்புக்கள் சிலவற்றுடன் கலந்துரையாடல் நடாத்தி இருந்தேன்.

16 ஆம் திகதி ஐ.நா சபையின் வெளியே நியூயோர்க்கில் எழுகதமிழ் நிகழ்வினை நடத்த ஒழுங்கு செய்திருந்தார்கள். பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் பல்வேறு நாடுகளில் இருந்தும் வர இருந்தார்கள். அங்கும் பல அமைப்புகளுடன் பேசும் வாய்ப்பு எனக்கு இருந்ததால் என்னுடைய பயணத்தை நீடித்திருந்தேன். ஐப்பசி 16 ஆம் திகதி நியூயோர்க்கிலே நடந்த எழுகதமிழில் பங்கு பற்றி னேன். அங்கு கனடாவில் இருந்தும் பேருந்துகளில் மக்கள் வந்திருந்தார்கள். 17 ஆம் திகதி நியூயோர்க் நகரில் இருந்து புறப்பட்டு 18 ஆம் திகதி ஜெனீவாவின் சூரிச் நகரை வந்ததடைந்து 19 ஆம் திகதி காலையில் இருந்து நான் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரிலே பங்கு பற்றி இருந்தேன். இம்முறை ஜெனீவாவுக்கு தமிழ் மக்கள் சார்பில் வந்திருந்த வர்கள் மிகக் குறைவு. நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி அனந்தி சசிதரன், இந்தியா வில் இருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் சிலர் வந்திருந்தார்கள்.

அப்போது "நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் "போட்டியிடப் போவதாக ஊடகங்கள் சொல்கின்றன" என்று கஜேந்திரகுமார் சொன்னார். அதற்கு "ஊடகங் கள் தங்கள் ஊகங்களை எழுதிக் கொண்டிருக் கிறார்கள்" என்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் முன்னதாக ஐப்பசி மாதம் 1 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தியோகப்பற்றற்ற முறையில் திருகோணமலை நகர மண்டபத்தில் கூடிய தமிழீழ விடுதலை இயக்கத் தின் பொதுக்குழு முடிவெடுத்தது. இது சம்பந்தமாக விரிவாக விவாதித்து ஜனாதிபதி தேர்தலில் இறங்கும் பிரதான கட்சிகள் உட்பட பல கட்சிகளுடனும் பேச

வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்கள் பிரிந்து செல்லும் உரிமை இருக்கின்றது எனத் தெரிவித்த இலங்கை ஐக்கிய சோஷலிசக் கட்சியை சேர்ந்த சிறிதுங்க ஜெயசூரியவுடனும் கூட பேச வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு அவர்கள் எங்கள் நிபந்தனைகளை ஏற்க மறுப்பார்களாக இருந்தால் மாற்று நடவடிக்கையாக தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தலாமா, அல்லது வேறு ஏதும் தெரிவுகள் இருக்கின்றனவா என்கிற ஆலோசனை களை வழங்க வேண்டும் என்ற பொறுப்பை ரெலோவின் 25 பேர் கொண்ட தலைமைக் குழு விடம் பொதுக்குழு ஒப்படைத்தது. இதன் பின்னர் தான் 8 ஆம் திகதி அவசரமாக வெளிநாட்டுக்கு பயணமாக வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. 25 ஆம் திகதி காலை கொழும்பை வந்தடைந்தேன்.

இந்த நேரத்தில் தான் தமிழ் மக்கள் பேரவையினர் அரசியல் கட்சிகளை சந்தித்து கலந்துரையாடி வருகின்றார்கள் எனக் கேள்விப்பட்டேன். அதில் ஏதாவது நல்லது நடக்கும் என எதிர்பார்த்தேன். நான் எங்கள் கட்சியின் செயலாளர் நாயகத்துடன் பேசி இருந்தேன். நாங்கள் ஒரு முயற்சி எடுக்கின்ற போது ஜே.வி.பி உட்பட பல கட்சிகளுடன் பேச வேண்டி இருக்கும் எனக் கூறினேன். அதற்கு

> **“கட்சிகளுக்கு, இயக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு பொது மனிதனாக என்னைப் பாருங்கள். இந்த தேர்தலில் சில ஆயிரங்கள் வாக்கு கிடைத்தாலும் அது தனிப்பட்ட சிவாஜிலிங்கத்துக்கு கிடைத்த வெற்றி அல்ல. இதனை தமிழினத்துக்கு கிடைத்த வெற்றியாகத்தான் நான் கருதுவேன்”**

“தம்பி நீங்கள் பேசுங்கள்” என்றார். ஜேவிபி ஐச் சேர்ந்த விஜிதகரத் அவர்களை பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து ஒன்றரை மணித்தியாலங்கள் பேசினேன். அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளில் இருந்து இறங்கி வரத் தயாரில்லை என்பதனை தெரிந்து கொண்டேன். ஆகக் குறைந்தது அரசியலமைப்பில் இருக்கக் கூடிய காணி பொலிஸ் அதிகாரத்தையாவது வழங்கத் தயாராக இல்லை. அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று கேட்ட போதும் வாய்ப்புக் குறைவு எனச் சொன்னார்கள்.

எங்களுடைய பொது வேட்பாளர் நிறுத் தப்படும் நிலை வந்தால், இங்குள்ள முக்கிய பிரச்சினையை முன்னிறுத்த வேண்டும். எங்களுடைய மக்களின் பிரச்சனைகளில் முதன்மையானது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை. அவர்கள் இன்று 1000 நாளை நெருங்கி வீதிகளில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர் தரப்பில் 20,000 பேருக்கு மேல் காணாமல் போகச் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். அதில் 6000 கும் மேற்பட்டவர்கள் இராணுவத்திடம் சரணடைந்து இருக்கின்றார்கள். இதற்கான ஆதாரங்கள் எங்கள் மக்களிடம் இருக் கின்றன. மீதிப்பேரை இராணுவம் வளைத்துப் பிடித் திருக்கின்றது. எமது வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை கூட 146000 பேர் கணக்கில் வராதவர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

கட்சியில்லாத காரணத்தினால் தான் பொது வேட்பாளர் விடயம் இழுபடப் போகின்றது என்கிற அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அவர்களை கொழும்பில் உள்ள இல்லத்தில் சந்தித்தேன். நீங்கள் பொது வேட்பாளராக நில்லுங்கள் எனக் கேட்ட போது அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. உயரம் பாய்தலில் உலக சாதனை படைத்தவரும், ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய தமிழருமான எதிர்வீரசிங்கம் அவர்களை நிறுத்துமாறு ஆனந்த சங்கரி அவர்களிடம் கோரிய போது அதற்கும் இணக்கம் காட்டவில்லை. கட்சிக்கு அப்பால் காணாமல் போக செய்யப்பட்டவர்களின் பிரதிநிதி யாக அனந்தியை நிறுத்துமாறு வற்புறுத்திய போது கடைசி நேரத்தில் வந்திருக்கிறீர்கள் என சங்கரி ஐயா கூறினார். மூன்றாம் திகதி இரவு தான் இந்த சந்திப்பு நடந்தது.

ஐந்தாம் திகதி காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்து கட்சி சார்பில்

இடம்பெற்ற ஞானசார தேரருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றேன். மாலை 5 மணியளவில் வல்வெட்டித்துறை தீருவிலில் குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வீர வேங்கைகளின் தூபியில் அஞ்சலியை செலுத்தி விட்டு 8.30 மணிக்கு வல்வெட்டித்துத்துறை சந்தியில் இருந்து பேரூந்தில் கொழும்புக்கு புறப்பட்டேன். அனந்தி சசிதரனும் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் ஏறினார். அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பை சென்றடைந்தோம். அங்கிருந்து சென்று கட்டுப்பணமான 75,000 ரூபாயை திருமதி அனந்தி சசிதரன் செலுத்தினார். சுயேட்சையாக போட்டியிடுவதாக இருந்தால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரால் 75,000 ரூபாய் செலுத்தப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளராக இருந்தால் 50,000 ரூபாய் செலுத்தப்படல் வேண்டும்.

7 ஆம் திகதி காலை சென்று வேட்புமனுவும் தாக்கல் செய்தோம். அதன் பின் வெளியே வந்து சிங்கள ஊடகங்களிடம் "தமிழர்களை நீங்கள் கிள்ளுக் கீரையாக நினைத்து இவ்வாறு நடப்பதை தடுப்பதற்காகவும் தமிழர்களின் நிலைமையை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்காகவும் தான் இந்தப் போட்டியே தவிர நான் ஜனாதிபதியாக வருவதற்கு அல்ல." என்று தமிழ், சிங்கள மொழிகளில் தெரிவித்தேன். அதனையடுத்து பல்வேறு அனாமதேய தொலைபேசி அழைப்புக்களில் அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களால் பேசினார்கள். சிங்களவன் தான் இங்கே ஜனாதிபதியாக வர முடியும் நீ ஏன் கேட்கிறாய் போன்ற தொனிப்படவும் கருத்துக்கள் அமைந்து இருந்தன.

இன்னொரு பக்கம் எமக்கு ஆதரவான நூற்றுக்கணக்கானோர் தொடர்பு கொண்டிருந்தனர். எல்லோருடைய தொலைபேசி அழைப்புக்களுக்கும் பதில் கூற முடியாத நிலைமையில் இரு நாட்கள் கைத்தொலைபேசியை அணைத்து வைத்து விட்டேன். நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்யும் இடத்தில் கூட பலரின் முகங்களில் கோபம் கொப்பளித்து இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 6 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஒரு பிரகடனத்தை நாங்கள் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க வேண்டும். அந்தப் பிரகடனப் பிரதி எனக்கு வழங்கப்படவில்லை. அது தவறுதலாக நடைபெற்றதா? அல்லது திட்டமிட்ட சதியா என்பது எனக்கு விளங்கவில்லை. ஆறாவது திருத்த சட்டப் பிரகடனம் இல்லாவிட்டால் நியமனப் பத்திரம் நிராகரிக்கப்படும் நிலை இருந்தது. அதனையும் ஒருவாறாக கையளித்து விட்டேன்.

பின் நியமனப் பத்திரங்கள் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும். அதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக 2 ஆட்சேபனைகள் கிடைத்தன. என் மீது பௌத்த பிக்கு ஒருவர் பின்வருமாறு ஆட்சேபனை கொடுத்திருந்தார். "இவர் ஒற்றையாட்சிக்கு எதிரானவர், சிங்கள பௌத்த நாடு என்பதனை ஏற்க மறுக்கிறார், இவர் ஒரு பிரிவினைவாதி. ஆகவே இவரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்." அதே போல் ஹிஸ்புல்லாவுக்கு எதிராகவும் இன்னொரு ஜனாதிபதி வேட்பாளர் ஆட்சேபனை மனுவை கொடுத்திருந்தார். அதில் அண்மையில் நடந்த குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் தொடர்பிருப்பதால் அவரை நிராகரிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இரண்டுமே தேர்தலுடன் தொடர்புபடாதவை என்பதனால் நிராகரிக்கப்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் அறிவித்தார். பின் ஒரு சின்னத்தைத் தெரிவு செய்யச் சொன்னார்கள் அதற்கு நான் மீன், மான், கேடயம் ஆகிய மூன்று சின்னங்களை எழுதி கொடுத்திருந்தேன். அதற்கு தேர்தல் ஆணையாளர் நாங்கள் குறிப்பிட்ட சின்னங்களை பலரும் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்.

ஒவ்வொரு சின்னத்தையும் ஆய்வு செய்தார்கள். மீன் சின்னத்தை 4 பேர் கேட்டிருந்தார்கள். அதில் பிக்குவும் ஒருவர். இருவர் பிக்குவுக்கு விட்டுக் கொடுத்திருந்தார்கள். ஆனால், எனக்கு மீன் சின்னம் வேண்டுமென்றேன். இறுதியில் குலுக்கலில் மீன் சின்னம் எனக்கு வந்தது. ஒவ்வொன்றையும் போராடியே பெற்றேன்.

சிவாஜிலிங்கம் இன்னொரு வேட்பாளரை வெல்ல வைக்க பணம் பெற்றார் என்ற குற்றச்சாட்டுக்களை வேதனையுடன் பார்க்கிறேன். வெளிநாட்டில் இருந்து நண்பர் ஒருவர் கேட்டார் "சிவாஜிலிங்கம் என்ன பகிடிக்கா போட்டியிடுகிறீர்" என. அதற்கு நான் சொன்னேன், "15 தடவைகளுக்கு மேல் ஜெனீவா சென்று எம் மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தது பகிடி என்றால், முள்ளிவாய்க்கால்

நினைவு தினத்தை யாரும் அனுட்டிக்க பயந்த காலத்திலும் அனுட்டித்தது பகிடி என்றால் இதுவும் பகிடி தான்" எனக் கூறினேன்.

நான் போட்டியிடுகின்ற விடயத்தை வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, 26 வருடங்களாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை, காணிகள் விடுவிக்கப் படாமல் இருக்கக் கூடிய பிரச்சினைகள், பயங்கரவாத தடைச் சட்டம் இப்படியான பிரச்சினைகளுக்கு எங்களின் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் எந்தப் பதிலும் இல்லை.

கடந்த 3 மாதங்களுக்குள் 5 தடவைகளுக் கும் மேல் முல்லைத்தீவில் இருந்து திருகோண மலை வரை கடற்கரை மார்க்கமாக பயணம் செய்திருக்கிறேன். ஒவ்வொரு இடங்களிலும் 500 ஏக்கர் வரையான காணிகள் சிங்கள குடி யேற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டு அதில் பௌத்த விகாரைகளுக்காக ஐந்து ஏக்கர் வரை ஒதுக்கப் பட்டு அந்தப் பகுதிகளில் இருக்கின்ற பௌத்த பிக்கு கள் ஒரு கட்டளைத்தளபதிகள் போல் செயற்படு கின்றனர். திருகோணமலை திரியாயில் அரிசி மலை புத்த பிக்கு தான் கட்டளைத் தளபதி போல் செயற்படுகிறார்.

இந்நிலையில் ஆக்கிரமிப்பைத் தடுக்க குறைந்தது காணி அதிகாரத்தை ஆவது நாங்கள் பெறாவிட்டால், 2025 க்கு இடையில் பாலஸ்தீனத் தில் காசா மேற்கு கரை போல நாங்கள் துண்டாடப் பட்டு தமிழ்த் தேசியம் என்று சொல்லக் கூடிய வாய்ப்பு இல்லாமல் போவதற்கான அபாயம் இருக் கின்றது. இதனைத் தடுப்பதற்கான சிந்தனையாக தான் 13 கோரிக்கைகளை கிழக்கு மற்றும் வடக்கு பல் கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் களிடம் கையளிக்குமாறு கூறி ஐந்து கட்சித்தலைவர் களிடம் கையளித்தார்கள். 13 கோரிக்கைகளையும் நான் ஏற்றிருக்கிறேன். 7 ஜனாதிபதித் தேர்தல்கள் முடிந்து விட்டன. அரசியல் தீர்வை அணில் என்று வைத்தால், அணிலை ஏற விட்ட நாய்களாக தமிழ் மக்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

6 மாத குழந்தை முதல் ஏராளமான இளை ஞர்கள் பெண்கள் இராணுவத்தினரிடம் சரணடைந் தனர். அப்படியானவர்கள் ஏராளம் பேர் காணாமல் ஆக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் எங்கே? இதற்கு பதில் சொல்ல வேண்டியவர் கோத்தபாய ராஜபக்ச தான். தான் பதவியேற்ற அடுத்த நாள் சிறை

# "நாங்கள் தோற்கடிக்கப்பட்ட இனமல்ல. விடுதலை பெற வேண்டிய இனம்"

களில் உள்ள இராணுவத்தினரை விடுவிப்பதாக கோத்தபாய ராஜபக்ச சொல்கிறார். அவ்வாறே தமிழ் அரசியல் கைதிகளை அடுத்தநாள் விடுவிக்கலாம் அல்லவா. ஏன் பகிரங்கமாக சொல்லவில்லை?

71, 88, 89 ஆண்டுகளில் ஜே.வி.பிக்கு பொதுமன்னிப்பு கொடுக்க முடிந்தது. ஈழத்தமிழர் களின் போராட்ட வரலாற்றில் ஒரேயொரு தடவை தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. சுமந்திரன் சம்பந்த மான வழக்கில் இணைக்கப்பட்ட நான்கு பேரோடு 98 அரசியல் கைதிகள் இன்று சிறைகளில் இருக் கின்றார்கள்.

ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின் நீ யாரோ நான் யாரோ. இப்படித் தான் காலம் காலமாக தமிழ் தலைமைகள் சிங்களத்திடம் ஏமாந்துள்ளார்கள். இந்த முடிவற்ற சுழற்சியில் இருந்து விடுபட்டு தமிழ்த் தேசிய இனத்தின் மறுமலர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தான் இந்த பொதுவேட்பாளர் செயற்பாடு முன்னெடுக்கப் படுகின்றது. வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் என நாடு பூராகவும் எனது பிரச்சார நடவடிக்கை களை முடிந்தளவு மேற்கொண்டு வருகின்றேன். மிகக் குறைந்தளவு வசதிகள் ஆளணிகளை வைத்துக் கொண்டு தான் இந்தப் பிரச்சார நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றேன்.

இனப்படுகொலை விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை ஊடாக கொண்டு போக வேண்டும். அதே போல் தொடர்ந்து இவர்கள் அரசியல் தீர்வை இழுத்தடிப்பார்களாக இருந் தால் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வை யிலே வடக்கு கிழக்கு பிராந்தியத்திலே ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்தி ஈழத்தமிழர்களின்

தலைவிதியை நாங்கள் நிர்ணயிக்கக் கூடிய விதத்திலே முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதனை நாங்கள் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட கொல்லப்பட்ட மக்களுக்காகவும் 50000 க்கும் மேற்பட்ட மாவீரர் கள், வீர மறவர்களுக்காகவும், அங்க இழப்புக்கள், கோடானுகோடி சொத்தழிவுகள், போன்றவற்றை சந்தித்திருக்கும் ஆயிரக்கணக்கானோருக்காகவும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். எதிர்காலத்திலும் இப்படியான பேரழிவு எமது இனத்துக்கு நடப் பதைத் தவிர்ப்பதற்கு எங்களை நாங்களே ஆளக் கூடிய விதத்திலே ஒரு ஆட்சி முறையை நாங்கள் நிலை நாட்ட வேண்டும். இதனை நான் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வேன் என கூறிக் கொள்கிறேன்.

ஒரு கட்சி அல்லது இயக்கத்தில் இருப்பதல்ல முக்கியம். மக்களுக்கு நாங்கள் என்ன செய் கின்றோம் என்பதே முக்கியம். இவ்வளவு அழிவுக் குப் பிறகு எங்கள் மக்களை அதன் பாதிப்புக்களில் இருந்து மீட்க வேண்டும். நாங்கள் தோற்கடிக்கப் பட்ட இனமல்ல. விடுதலை பெற வேண்டிய இனம். கட்சிகளுக்கு, இயக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு பொது மனிதனாக என்னைப் பாருங்கள். இந்த தேர்தலில் சில ஆயிரங்கள் வாக்குக் கிடைத்தாலும் அது தனிப்பட்ட சிவாஜிலிங்கத்துக்கு கிடைத்த வெற்றி அல்ல. இதனை தமிழினத்துக்கு கிடைத்த வெற்றி யாகத்தான் நான் கருதுவேன். அதனால் தான் நான் என்னை ஒரு குறியீடாக மட்டும் பாருங்கள் என திரும்ப திரும்ப சொல்கிறேன். ஒரு போதும் எத்தனை ஆயிரம் வாக்குகள் கிடைத்தாலும் சிவாஜிலிங்கத் துக்கு இவ்வளவு வாக்குகள் கிடைத்தன என்பதனை நேரடியாகவோ மறைமுகமாகவோ உரிமை கோர மாட்டேன் என்பதனை நான் பகிரங்கமாக எங்கள் மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எனது முயற்சிக்கு இவ்வளவு ஆதரவு கிளம்பும் என உண்மையில் நானே எதிர்பார்க்க வில்லை. நூற்றுக்கணக்கானோர் உள்ளூரிலிருந் தும் வெளியூரில் இருந்தும் நேரில் சந்திக்கிறார்கள். கைபேசி தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கி றது. ரெலோ கட்சியில் இருந்தும் ஏராளமானோர் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்கள். ஏனைய கட்சிகளில் இருந்தும் ஆதரவு வருகிறது. பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரில் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலும் சந்தித்திருக்கின்றார்கள். எந்த அமைப்புக்களுடனும் பேசி எமது இனத்துக்கான உரிமைக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லோரையும் முடிந்

**"நாங்கள் மக்கள் சேவைக்கு வந்தவர்கள். பணம் சம்பாதிப்பது என்றால் அதற்கு வேறு வழி உள்ளது. அரசியலுக்கு வந்து பணம் சம்பாதிப்பவர்களை எதிர்க்கிறேன்"**

தளவு அணி திரட்டுவதற்கு நான் தயாராக இருக் கின்றேன் என்கிற செய்தியை தான் என்னால் சொல்ல முடியும். கூடியளவு தமிழ்க் கட்சிகளிடம் இருந்து ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்குவது தான் எங்கள் நோக்கம். தனிமரம் தோப்பாகாது.

2010 ஆம் ஆண்டு வேட்பு மனு தாக்கல் செய்த போது மஹிந்த தேசப்பிரிய தலையில் கை வைத்தார். உங்களை தெற்கில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு காட்ட வேண்டும். இங்கேயெல்லாம் கோடானு கோடியை சொத்துமதிப்பாக காட்டுவார்கள். கணக்கில் வராத பல கோடி இருக்கும். நீங்கள் எல்லாம் மக்களுக்கு முன்னுதாரணம் என்றார். எனக்கோ என் மனைவிக்கோ இலங்கையில் காணி வீடு கூட சொந்தமாக இல்லை. நான் சாகும் போதும் கடன்காரனாகத் தான் சாவேன்.

என்னைப் பொறுத்தவரையில் நாங்கள் மக்கள் சேவைக்கு வந்தவர்கள். பணம் சம்பாதிப்பது என்றால் அதற்கு வேறு வழி உள்ளது. அரசிய லுக்கு வந்து பணம் சம்பாதிப்பவர்களை எதிர்க்கி றேன். மக்களில் பலர் இன்று அடுத்தநேர கஞ்சிக்கு வழியில்லாமல் இருக்கின்றார்கள். எத்தனையோ இழப்புக்களை சந்தித்து மீண்டுள்ள எம் மக்களை பார்த்தாவது அரசியலில் பணம் சம்பாதிப்பதை விட்டு விட வேண்டும். எல்லாவற்றையும் விட மக்கள் பிரச்சினை தான் கண்ணுக்கு முன் உள்ளது. எங்கள் மக்கள் மனமுடைந்து போய் நொந்து போய் இருக்கின்றார்கள். அவர்களை வாழ வைக்க வேண்டியது எம் கடமை.

# 2019 ஜனாதிபதி தேர்தல்: ஆள்மாற்றமே தவிர அரசியல் மாற்றம் இல்லை

மதியரசன் கிரிசாந்தி
3 ஆம் வருடம், ஊடகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்



இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்தகாலம் நிறைவடைந்துள்ள நிலையிலும் இன்றளவிலும் சிறுபான்மை தேசிய இனத்தவர் களாகிய தமிழினம் அதிலிருந்து மீள முடியாத துர்ப்பாக்கிய நிலையிலே தான் காணப்பட்டு வருகின்றது. சிங்களதேசம் வெற்றி கொண்டவர் களாக தம்மை அடையாளப்படுத்தி ஈழத்தமிழர் களின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாய் கூவித்திரிந்தாலும் தமிழினம் போரின் வடுக்களை இன்னமும் சுமந்து கொண்டே தான் பயணிக்கின்றது என்பது வெளிப்படையானதே.

தமிழர்கள், அடிப்படைத் தேவைகள் தொடக்கம் அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொள்வது வரை பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆயுதப் போராட்டமானது மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் சிறுபான்மையினரின் ஒற்றை நம்பிக்கையாக 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பல எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

இன விடுதலைக்காக, இனத்தின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக, தமக்கான உரிமை களை வென்றெடுப்பதற்காக, தமக்கென்று ஒரு தேசத்தை வேண்டிப் போராடிய நம்மவர்களை வல்லரசு நாடுகளின் கைகோர்ப்பின் மூலம் இன அழிப்பில் ஈடுபட்ட, அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச மீது வெறுப்பை கொண்டிருந்த தமிழினம் அவருக்கான எதிர்ப்பைத் தெரிவிக்கக் கிடைத்த வாய்ப்பாகவே 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைக் கருதினர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி சார்பில் மஹிந்த ராஜபக்ச போட்டியிட்டார். அவருக்கு எதிராக முன்னாள் இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளராக போட்டியிட்டார். இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. ஈவிரக்கமின்றி நாட்டிலே இனப் படுகொலையை நிகழ்த்தி முடித்த ராஜபக்ச விற்கு எதிரான உணர்வின் காரணமாக தமிழர் பெரும்பான்மையாக வாழும் தமிழ்ப் பிரதேசங்கள் யாவற்றிலும் ராஜபக்சவினால் வெற்றியை நிலை நாட்ட முடியாமல் போனது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா போன்ற தமிழ் பிரதேசங்களில் சரத் பொன்சேகாவின் உடைய வெற்றி தமிழர்களின் ராஜபக்ச மீதான வெறுப்பை வெளிப்படுத்தியிருந்தது .

சரத் பொன்சேகாவை வெல்ல வைப்பதோ அல்லது எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கு ஆதர வளிப்பதோ தமிழர்களின் நோக்கமாக இருக்க வில்லை. மாறாக ராஜபக்ச வெற்றி பெறுவதை தடுப்பதே அவர்களது ஒரே ஒரு குறிக்கோளாக இருந்தது.

இருப்பினும் சிங்களப் பெரும்பான்மை ராஜபக்சவிற்கு ஆதரவாக வாக்களித்தமையால் 57.88 வீதமான வாக்குகளைப் பெற்று மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார். சிங்களவர் பெரும் பான்மையாக வாழும் 16 மாவட்டங்களில் அதி கூடிய வாக்குகள் பதிவாகி இருந்தன. இது சிங்கள பெரும்பான்மை இனவாதத்தின் உச்சத்தை வெளிப் படுத்தியிருந்தது.

யுத்தத்தின் வடுக்களை உடலிலும் மனதிலும் சுமந்த தமிழ்மக்கள் இழப்புக்களை நிறையவே பார்த்தவர்கள். இருந்த வேளையிலும்

அரசியல் ரீதியான போராட்டமாக 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நம்பியிருந்த வேளையிலே அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே தந்தது. 2009 யுத்தத்தில் தமிழ் இனத்தை அழித்தவனே மீண்டும் தம்மை ஆளப்போவதை எண்ணி தமிழர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார்கள். சகல விடயங் களிலும் தமிழர் தரப்பில் பாரியளவு பின்னடைவை சந்திக்க கூடிய சூழ்நிலை உருவாகியது.

யுத்தத்தின் பின் சரணடைந்தவர்கள் காணாமல் போனமை, அரசியல் கைதிகளாக தமிழ் இளைஞர்கள் பலரும் தடுத்து வைக்கப்பட்டமை, பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் மேல் அநீதியான முறையில் பிரயோகிக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டமை, அவர்களின் நிலங்களை இராணுவம் தொடர்ந்து ஆக்கிரமித்து இருந்தமை என போருக்குப் பின்னரும் தமிழர்கள் மீதான திட்டமிட்ட இனவழிப்பு தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

இவ்வாறாக தமிழர்கள் மீதான வன்முறை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் 2010 புரட்டாதியில் நிறைவேற்றிய 18 ஆவது திருத்தத் தின் மூலம் ஒருவர் அதிகபட்சம் இரண்டு பதவிக் காலங்கள் மட்டுமே ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற சட்டம் நீக்கப்பட்டது. அதன்மூலம் ராஜபக்ஷ மூன்றாவது முறையும் போட்டியிட அனுமதி பெற்றார். இதன்படி 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரினை எதிர்த்து சிறீலங்கா சுதந்திர கட்சி பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சி பொது வேட்பாளராக களம் இறங்கினார். தாம் பதவிக்கு வந்தால் 100 நாட்களுக் குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாகவும் சர்ச்சைக்குரிய 18 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை திரும்பப் பெறப் போவதாகவும் தமிழர்களுக்கான இனப்பிரச்சனைக்கு தீர்வினைப் பெற்றுத் தரப் போவதாகவும் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்நிலையில் 2014 மார்கழி 30 அன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவிற்கு நிபந்தனையின்றி ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தது. இதன்படி தமிழ்மக்கள் அனைவரையும் கூட்டமைப்பு சிறிசேனாவிற்கு வாக்களிக்கும்படி பணித்திருந்தது. இரண்டு வேட்பாளர்களுமே சிங்களவர்கள் மத்தியில் சம அளவிலான போட்டித் தன்மையுடன் காணப்பட்ட தன் காரணமாக வெற்றியாளரைத் தீர்மானிக்கும் தரப்பாக தமிழர்கள் காணப்பட்டமையினால் இத் தேர்தலில் தமிழர்களுடைய வாக்குகளானது மிகவும் முக்கியமானதொன்றாகக் காணப்பட்டது. மீண்டும் மகிந்தவிற்கு எதிரான அரசியல் போராட்டமாக 2015 தேர்தலைக் கருதிய தமிழினம் தமது வாக்குகளை சிறிசேனவிற்கு அளித்திருந்த நிலையில் தமிழ் பிரதேசத்தின் பெரும்பான்மையான வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன இலங்கையின் ஜனாதி பதியாக பதவியேற்றார்.

ஆயினும் தமிழரின் வாக்குகளினால் ஆட்சி பீடம் ஏறிய சிறிசேன தமிழ்த் தரப்பிற்கு அளித்த வாக்குறுதிகள் எவற்றையுமே தனது ஆட்சிக்காலத் தில் நிறைவேற்றவில்லை. நிபந்தனைகள் ஏதும் இன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் வாக்குகளை சிறிசேனாவுக்கு வழங்கியதன் காரண மாக எதையுமே சட்டரீதியாக பெற முடியாமலும் போனது. சிங்களத் தலைவர்களால் மாத்திரமன்றி தமிழ்த் தலைமைகளாலும் தமிழினம் ஏமாற்றப்பட்டது யாவரும் அறிந்ததே.

இன்றளவிலும் தமிழ் தலைமைகள் எனக்கூறி பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களால் தமிழர்களுக்காக அரசியல் உரிமைகள் எதனை யும் பெற்றுத் தராமல் இருப்பது தமிழினத்தின் சாபக்கேடே. தமிழ்மக்கள் போரின் நிறைவிற்கு பின்னர் இன்றளவிலும் எந்த ஒரு ரீதியிலும் எதையும் மீளப் பெற்றுக் கொள்ள முடியாமல், சிங்களப் பெரும்பான்மையாலும் தமிழ் தலைமை களின் பிழையான வழி நடத்துதல்களினாலும் பொய் வாக்குறுதிகளினாலும் துவண்டு போயிருக்கிறார்கள்.

இந்நிலையிலேயே இலங்கையில் மீண்டும் அரச தலைவர் தேர்தல் வந்திருக்கிறது. 2009 இல் இனஅழிப்பில் ஈடுபட்ட ராஜபக்சவின் குடும்பம் மீண்டும் தேர்தலில் களம் இறங்குகிறது. சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கோத்தபாய ராஜபக்ச வும் இவருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவும் தேர்தலிலே போட்டியிடுகிறார்கள்.

மீண்டும் அரசியல் ரீதியில் முக்கியமான முடி வொன்றை எடுக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். இம்முறை தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தமிழர்கள் தரப்பில் எழுந்து

(16 ஆம் பக்கம் பார்க்கவும்)



# தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ் பொது வேட்பாளர்

சி.அ.யோதிலிங்கம்

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் சிங்கள தேசம் தன்னுடைய தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்காக நடைபெறுகின்ற ஒரு தேர்தல். இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். சிங்கள நிகழ்ச்சி நிரலில் நின்று பார்க்காமல் தமிழ்த் தேசிய நலனில் நின்று கொண்டு நாங்கள் இந்தத் தேர்தலை கையாளுவதற்கு முயற்சிக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது தமிழ் மக்கள் தாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதுதான் உண்மையில் பொருத்தமானதாக இருக்கும்.

அந்த பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் நாங்கள் ஒரு தேசமாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதற்கு முன்வரக் கூடியதாக இருக்கும் என்பது முதலாவது விடயம். இரண்டாவது தமிழ் மக்களுடைய அபிலாசைகள் எது என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவி புரிவதாக இருக்கும். மூன்றாவது தமிழ் அரசியல் இன்று சிங்கள நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்குப்பட்டு உள்ளது. சிக்குப்பட்ட தமிழ் அரசியலை சிங்கள நிகழ்ச்சி நிரலில் இருந்து வெளியே கொண்டு வரவேண்டும். வெளியே கொண்டு வருவதற்கும் இந்த தமிழ் பொதுவேட்பாளர் உதவியாக இருக்கும். நான்காவது விடயம் தமிழ் தலைமைகளுடைய போருக்கு பின்னராக நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்களுக்கான சர்வதேச வெளி மூடப்பட்டிருக்கின்றது. இந்த சர்வதேச வெளியை நாங்கள் திறந்துதான் ஆக வேண்டும். ஏனென்றால் பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடி சொல்லுவார் ஒரு தேசிய போராட்டம் தேசிய அரசியலினால் தான் உருவாகும். ஒரு தேசியப் போராட்டம் தேசிய அரசியலினால் வளர்ச்சியடையும். ஆனால் ஒரு தேசியப் போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியல் தான் தீர்மானிக்கும். தமிழ் மக்களும் சர்வதேச அரசியலை நடாத்தியாக வேண்டும்.

இன்றைக்கு இலங்கைத்தீவு சர்வதேச அரசியலோடு முழுமையாக பிணைக்கப்பட்ட ஒரு நிலையில் சர்வதேச அரசியலை நகர்த்தாமல் தமிழ் மக்களால் முன்னே செல்ல முடியாது. ஆகவே நாங்கள் சர்வதேச வெளியை திறப்பதன் ஊடாகத்தான் இந்த சர்வதேச அரசியலை நடாத்த முடியும். அந்த வகையிலும் பொது வேட்பாளர் தான் அதற்கு கை கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

இதனைவிட இலங்கைத் தீவை வழி நடத்துவது என்பது இலங்கைத்தீவை மையமாக வைத்த பூகோள அரசியல் தான். விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது என்பதற்கும் காரணம் புவிசார் அரசியல் தான். மகிந்த தோற்கடிக்கப்பட்டதற்கும் காரணம் புவிசார் அரசியல் தான். இன்று கோத்தபாய மேலெழும்புவதற்கும் காரணம் புவிசார் அரசியல் தான். புவிசார் அரசியலை மையமாக வைத்துத் தான் இங்கே எல்லாம் நடைபெறுகின்றது. புவிசார் அரசியலில் கௌரவமான பங்காளிகளாக தமிழ் மக்கள் மாற வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கம் இருக்கும் வரை கௌரவமான பங்கிருந்தது. தமிழ் மக்களின் விவகாரத்தை விட்டு விட்டு வல்லரசுகளால் எந்த ஒரு நகர்வுமே மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது. ஆனால் இன்று தமிழ் தலைமைகளை தங்களுடைய சட்டைப்பைகளுக்குள் வைத்துக்

கொண்டு வல்லரசுகள் தங்களுடைய நலனை மாத்திரம் பார்க்கின்ற நிலைமை தான் இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றி ஒரு கௌரவமான பங்கை தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடிய புவிசார் அரசியலை எடுக்க வேண்டும். அப்படியாயின் பொதுவேட்பாளராக இருப்பதனூடாகத் தான் நாங்கள் அதனை சாத்தியமாக்க முடியும்.

இதனை விட தமிழ் மக்கள் ஒரு சின்ன தேசிய இனம். ஒரு சின்ன தேசிய இனம் தன்னுடைய அக ஆற்றலை மாத்திரம் நம்பியிருக்க இயலாது. புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு தமிழ் மக்களுடைய அடிப்படை சக்திகளாக இருக்கின்றவர்கள் தாயகத்தில் வாழுகின்ற மக்களும் அதனுடைய நீட்சியாக புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற மக்களும். அவர்களை நாங்கள் வலுவாக அணிதிரட்ட வேண்டும். இரண்டாவது விடயம் தமிழ் மக்களின் சிறந்த சேமிப்பு சக்திகளாக இருப்பவர்கள் மலையகத் தமிழ் மக்கள், தமிழக தமிழ் மக்கள் உட்பட உலகெங்கும் வாழுகின்ற தமிழக வம்சாவளித் தமிழ் மக்கள். ஆகவே அவர்களை நாங்கள் எங்களுக்குள் அணிதிரட்ட வேண்டும். அதற்காக நாம் உலகத் தமிழ்த் தேசிய வாதம் என்கின்ற சிந்தனையைக் கூட முன்கொண்டு செல்லலாமா என்று நாங்கள் யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கிலும் வாழுகின்ற ஜனநாயக சக்திகள் தமிழ் மக்களின் நல்ல நட்பு சக்திகள். ஆகவே நாங்கள் நல்ல நட்பு சக்திகளையும் திரட்ட வேண்டும். அடிப்படைச் சக்திகளையும் சேமிப்பு சக்திகளையும் நட்பு சக்திகளையும் எங்களுடைய அரசியலுக்குப் பின்னால் அணி திரட்டுவதனூடாகத் தான் நாங்கள் ஒரு பலமான தேசிய இனமாக இருக்க முடியும். இதனைக் கொண்டு வர வேண்டுமென்றால் நிலத்திற்கும் புலத்திற்கும் தமிழகத்திற்கும் ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று தேவை. இந்த ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தை கொண்டு வருவதற்கு பொதுவேட்பாளரின் நிலைமை நிறைய உதவிக்கரமாக இருக்கும்.

**“துரதிஷ்டவசமாக பொதுவேட்பாளர் என்ற சிந்தனை தமிழ் மக்கள் மத்தியில் பெரியளவிற்கு பேசுபொருளாக்கப்பட வில்லை. அது பேசு பொருளாக்கப்படாததால் தமிழ் அரசியல் சக்திகளும் குழம்பியிருக்கின்றார்கள்”**

தமிழ் மக்கள் மரபுரீதியாக வெற்றுக் காசோலை கலாசாரத்திற்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக்கட்சி எதுவுமே செய்யமாட்டார்கள் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கின்ற தன்மை. இந்த நிலைமையை நாங்கள் மாற்றியாக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியினர் என்ன நினைக்கின்றார்கள் என்றால் தமிழ் மக்களுக்கு வேறு தெரிவில்லை. ஆகவே தமிழ் மக்கள் தங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று. இந்த நிலைமையை மாற்றி நாங்கள் ஒரு பேரம் பேசுகின்ற அரசியலை முன்னெடுக்க வேண்டும். பொதுவேட்பாளர் என்பதை முன்நிறுத்திக் கொண்டு நாங்கள் போவோமாக இருந்தால் அங்கே கடும் போட்டி நிலவுகின்ற போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் தெற்கு தேசியவாதம் பலமாக இருக்கின்ற நிலையில் சிங்கள வாக்குகள் அவர்களுக்கு குறைவு. அவர்கள் ஏனைய இனங்களின் வாக்குகளைத் தான் நம்பியிருக்கின்றார்கள். நாங்கள் இதில் இறுக்கமாக நிற்போமாக இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பேரம் பேசலுக்கு வரும். பேரம் பேசலுக்கு வருகின்ற பொழுது நாம் முதலாவது விருப்பு வாக்கை ஒரு தேசமாக இருக்கின்றோம் என்பதை வெளிக்காட்டுவதற்கும், அவர்கள் பேரம் பேச வந்தால் இரண்டாவது விருப்பு வாக்கை பேரம் பேசல் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கலாம் என்ற ஒரு சூழலை நாங்கள் உருவாக்கலாம்.

பொதுவேட்பாளரை கொண்டு வருதனூடாகத் தான் நாங்கள் அதனை உருவாக்கலாம். எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலை எப்படி பேரம் பேசும் அரசியலாக மாற்ற வேண்டும் என்பதையும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக பொதுவேட்பாளர் என்ற சிந்தனை தமிழ் மக்கள் மத்தியில் பெரியளவிற்கு பேசுபொருளாக்கப்பட

வில்லை. அது பேசுபொருளாக்கப்படாததால் தமிழ் அரசியல் சக்திகளும் குழம்பியிருக்கின்றார்கள். முன்னேறிய பிரிவினரும் குழம்பியிருக்கின்றார்கள். மக்களும் குழம்பியிருக்கின்றார்கள். இந்த நிலைமையை மாற்றி சரியான தெளிவூட்டலை கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இன்று இருக்கின்ற மிகப்பெரிய கவலையான விடயம் என்னவென்றால் எமது அரசியல் சக்திகள் பின்னுக்குத்தான் இருக்கின்றன. அவர்கள் இந்த தேசிய செயற்பாட்டில் முன்னணி வகிப்பவர்களாக இன்று இல்லை. அதனால் தான் மக்கள் தாங்கள் தாங்களாகவே போராட்டத்தை நடாத்த வெளிக்கிடுகின்றார்கள். பொதுவாக அரசியலில் சொல்லப்படுவது தலைவர்கள் முன்னே மக்கள் பின்னே என்று. இன்று மாறி நடைபெறுகிறது மக்கள் முன்னே தலைவர்கள் பின்னே என்ற நிலைமை தான் இருக்கின்றது. இந்த நிலைமையிலே நாங்கள் மக்களுடைய போராட்டத்தை கையிலே எடுத்துக் கொண்டு இந்த அரசியற் கட்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய நிலையை நோக்கி முன்னேற வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆகவே இந்த விதமான நகர்வுகளை நடத்துவதனூடாகத்தான் அந்த விடயத்தில் நாங்கள் முன்னேறிச் செல்லலாம் என்று நான் நினைக்கின்றேன். ஆகவே பொதுவேட்பாளர் என்பது மிகவும் முக்கியமான விடயம்.

தமிழ் மக்கள் பேரவை இது தொடர்பாக ஆராய்வதற்காக இது தொடர்பாக பொதுக் கருத்தை உருவாக்குவதற்காகவும் ஒரு சுயாதீனக் குழுவை சிபார்சு செய்திருந்தது. அந்த சுயாதீனக் குழு பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக எல்லா அரசியல் கட்சிகளுடனும் கதைத்தது. ஆனால் அரசியல் கட்சிகள் போதியளவிற்கு ஒத்துழைக்கவில்லை. ஒத்தழைக்காத ஒரு சூழலில் பொது வேட்பாளர் என்ற முயற்சி என்பதை ஒரு முன்னேற்றத்திற்கு கொண்டுபோக முடியவில்லை.

இந்த நிலையில் தான் சிவாஜிலிங்கம் தன்னை ஒரு பொதுவேட்பாளராக நிறுத்தியிருக்கின்றார். சிவாஜிலிங்கம் தொடர்பாக நிறைய விமர்சனங்கள் இருக்கின்றது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். சிவாஜிலிங்கம் தொடர்பாக குருநாகலில் தேர்தலில் போட்டியிட்டார். அவர் கிலாரி கிளின்டனின் வெற்றி வேண்டி நல்லூரில் தேங்காய் அடித்து கோமாளித்தனமாக நடந்து கொண்டார் என்ற விமர்சனங்களும் இருக்கின்றது. இது அவருடைய ஒரு பக்கம்.

அவருக்கு மறுபக்கமும் இருக்கின்றது என்பதை நாங்கள் மறுக்கக் கூடாது. சிவாஜிலிங்கம் வலுவான ஒரு தேசிய செயற்பாட்டாளர் என்ற ஒரு மறுபக்கமும் இருக்கின்றது. தலைவர் பிரபாகரனுடைய தாயார் மரணப்படுக்கையில் இருந்த பொழுது அவரை பராமரித்ததுடன் அவருடைய இறுதிச் சடங்கை முழுமையாக செய்து முடித்தவர். முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நடக்கின்ற பொழுது அந்த ஒரு வாரகாலமாக எங்கேயெல்லாம் அழிவு நடந்ததோ அங்கேயெல்லாம் வாழைக்குற்றியை தன்னுடைய ஓட்டோவில் ஏற்றிக்கொண்டுபோய் வைத்து அஞ்சலி செலுத்துவார். இது அவருடைய தேசிய உணர்வைக் காட்டுகின்றது. விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்த பொழுது கடுமையாக எதிர்த்து அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை தடுத்ததில் சிவாஜிலிங்கத்திற்கு சரியான பாத்திரம் இருக்கின்றது. மாகாண சபையில் இனஅழிப்பு தீர்மானம் கொண்டு வருவதற்கு சிவாஜிலிங்கம் பிரதான காரணமாக இருந்தார். சிவகுமாரின் நினைவு தினத்தை கொண்டாட எல்லா கட்சிகளும் பயந்திருந்த வேளையில் சிவாஜிலிங்கம் முன் வந்து அந்த நிகழ்வை நடத்தினார். இவ்வாறான பக்கமும் சிவாஜிலிங்கத்திற்கு உண்டு.

ஒரு அரசியற் தலைமை வலுவாக இல்லாத நிலைமையில் இப்படியான தீவிர செயற்பாட்டாளர்கள் தனித்துத்தான் ஓடுவார்கள். இதனை தடுக்க முடியாது. வலுவான அரசியல் தலைமை வரும்போது தான் நாங்கள் அவரை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். தனித்து ஓடும் போது நிறையத் தவறுகள் வரும். ஒரு குழுவாகச் செயற்படும் பொழுது தவறுகள் குறைவாக இருக்கும். அந்த வகையில் அவர் நிறையத் தவறுகள் விட்டிருக்கலாம். ஆனபடியால் அதனை பெரிதுபடுத்துவது இன்றைக்கு உகந்தது என்று சொல்லிவிட முடியாது.

அதைவிட தேர்தலைப் பொறுத்த வரையில் சிவாஜிலிங்கம் ஒரு குறியீடு மட்டும் தான். சிவாஜிலிங்கத்தை ஒரு குறியீடாக வைத்துக்கொண்டு தமிழ் தேசிய அரசியல் நியாயப்பாடுகளை எப்படி முன்நின்று செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தான் நாங்கள் இங்கே யோசிக்க வேண்டும். இதில் தான் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

எல்லோரும் சொல்லுகிறார்கள் சிவாஜி லிங்கம் 2015 ஆம் ஆண்டிலும் கேட்டார் 2010 ஆம் ஆண்டிலும் கேட்டார் என்று. 2010 ஆம் ஆண்டு கேட்ட நிலைமைக்கும் இன்று கேட்கின்ற நிலைக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது. அன்று பொது வேட்பாளர் என்ற கருத்து வளர்ச்சி அடையாத ஒரு காலம். போர் முடிந்திருந்த காலம். எல்லோரும் பயந்த நிலையில் இருந்த ஒரு காலகட்டம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

**இன்று சிவாஜிலிங்கம் ஒரு தமிழ் வேட்பாள ராக இருக்கின்ற பொழுது அவர் பலவீனம் அடைவார் என்றால் தமிழ் தேசியமும் பலவீனமடையக் கூடிய சூழ்நிலைதான் வரும். வரும் தேர்தலில் சிவாஜிலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குகளை விட சஜித் பிரேமதாஸவிற்கும் கோத்தபாயவிற்கும் வாக்குகள் அதிகமாக இருந்தால் பலவீனப்படப் போவது சிவாஜிலிங்கம் அல்ல. பலவீனப்படப் போவது தமிழ் தேசிய அரசியல் தான்.**

ஆகவே இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து நாங்கள் இதில் முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது. மிக கவலை யான விடயம் என்னவென்றால் இது தொடர்பாக அரசியல் தலைவர்களிடமும் புலமையாளர்களிடமும் ஒரு குழப்ப நிலைதான் இருக்கின்றது. அவர்கள் இந்த குழப்ப நிலைக்கு முடிவு கண்டு நாங்கள் முன் நோக்கிச் செல்வதற்கான மூலோபாயங்களை வகுத்து செயற்பட வேண்டியது அவசியமானது.

சிவாஜிலிங்கம் என்கின்ற பொதுவேட் பாளரை ஆதரிப்பதன் மூலம் கோத்தபாயவை கொண்டு வரப்போகின்றனர் என்ற விமர்சனம் முன் வைக்கப்படுகின்றது. உண்மையில் கோத்தபாயவை வரவிடாமல் தடுக்க சஜித்துக்கு வாக்களிக்க நினைப்பதே தமிழ் அரசியலின் பலவீனம் என்று தான் சொல்ல வேண்டும். இன்று தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸாக்கு வாக்களித்தும் கோத்தபாய வெற்றியடைந்தால் என்ன செய்வது? கோத்தபாய வெற்றியடைந்தாலும் அதற்கு முகம் கொடுப்பதற்கு தமிழ் அரசியல் தயாராக வேண்டும். சிங்கள அரசியலில் அடிக்கடி இப்படி மாற்றங்கள் நடந் திருக்கின்றன. சிங்கள அரசியலுக்கு ஏற்ற மாதிரி நாங்கள் அரசியல் செய்ய முடியாது. சிங்கள அரசியலை எவ்வாறு கையாள்வது என்பதில் தான் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

## "தேர்தலைப் பொறுத்த வரையில் சிவாஜிலிங்கம் ஒரு குறியீடு மட்டும் தான். சிவாஜிலிங்கத்தை ஒரு குறியீடாக வைத்துக்கொண்டு தமிழ் தேசிய அரசியல் நியாயப்பாடுகளை எப்படி முன்நின்று செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தான் நாங்கள் இங்கே யோசிக்க வேண்டும்"

கோத்தபாய ஜனாதிபதியாக வந்து கட்டுக் கடங்காமல் அராஜகம் செய்வதற்கு இலங்கைத்தீவு உலகத்தைவிட்டு தனித்தீவாகவா இருக்கிறது. இலங்கைத்தீவு உலகத்தில் தான் இருக்கின்றது. உலகத்தினுடைய ஜனநாயக செயற்பாடுகளுக்கு இலங்கைத்தீவும் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். இன்று வெள்ளை வான் வருவதற்கு இங்கு ஆயுதப் போராட்டமா நடைபெறுகின்றது. அரசியல் ரீதியாக ஜனநாயக ரீதியாகத் தான் நாங்கள் போராட்டங் களை நடத்துகின்றோம். அப்படி நாங்கள் நடத்து கின்ற போது இப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்வு கள் தான் எதிர்வரும் காலத்திலும் நடைபெறுவதற் கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. தமிழ் மக்களின் ஆதரவோடு இருக்கின்ற நல்லாட்சி அரசாங்கம் தான் கன்னியாவிலையும் முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் கோயிலடியிலையும் இவ்வளவு அராஜகங்களையும் நடத்தியது. அராஜகங்கள் தொடரலாம் தான். அப்படித் தொடருகின்ற போது அதற்கு முகங்கொடுப்பதற்கு நாங்கள் தயாராக வேண்டும்.

இதைவிட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை விடவா இவர்கள் பெரிதாக அநியாயங்களைச் செய்து விடப் போகிறார்கள்? சிங்கள தேசத்தினு டைய அரசியல் என்பதே இன அழிப்புத்தான். தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அவர்களுக்கு பிரச்சனை. அந்த அழிப்பு நடவடிக்கை அவர்கள் தொடர்ந்து செய்வார்கள் தான். அது எந்த அரசாங்கம் வந்தாலும் செய்யும். ஏனென்றால் அது சிங்கள அரசாங்கத்தின் முடிவில்லை. அது சிங்கள அரசின் தீர்மானம். சிங்கள அரசின் தீர்மானமாக இருப்பதால் எந்த அரசாங்கம் வந்தாலும் அதை செய்யும். அவர்கள் எங்களின் நிலத்தைப் பறிப்பார்கள்,

மொழியை அழிப்பார்கள், பொருளாதாரத்தை அழிப்பார்கள், கலாச்சாரத்தை அழிப்பார்கள், அங்கே ஒரு போராட்டத்தை நடத்தினால் அதை அழிப்பார்கள். இதற்கு எப்படி முகம் கொடுப்பது என்பதற்காக தமிழ் மக்கள் தங்களை தயார்படுத் திக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு அவர்களுக்கு சாதகமான காலகட்டம். இந்த பூகோள அரசியல் தொடர்ந்தும் தொழிற் படத்தான் போகின்றது. அந்த பூகோள அரசியலில் சீன அணிக்கும் அமெரிக்க இந்திய மேற்குலகத்திற் கும் இடையிலான போராட்டம் தொடர்ந்து வரத்தான் போகின்றது. அந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் முக்கிய பங்காளிகளாக வரக் கூடியதான வாய்ப்புக் களும் சூழலும் இருக்கின்றது. ஆகவே இதைக் கையாள்வதன் மூலம் தமிழ் மக்கள் முன்னேறிச் செல்லவதற்கான ஒரு மார்க்கத்தை அவர்கள் கண்டுபிடித்து செயற்பட வேண்டும் என்று நினைக் கின்றேன்.

இந்த இடத்தில் குர்திஸ் மக்களின் போராட்டம் எங்களுக்கு நல்ல முன்னுதாரணம். ஈராக்கினு டைய நெருக்கடியை சமாளிப்பதற்காக அவர்கள் அமெ ரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து போரிலே அவர்களும் பங்குபற்றினார்கள். இன்று அமெரிக்க கைவிட்ட நிலையில் அவர்கள் சிரியா ஊடாக ரஷ்யாவுடன் உறவுகளைப் பேணுகின்றார்கள். உறவுகளைப் பேணி தங்களை தக்க வைக்கின்றார்கள். காலத் திற்கு ஏற்றவாறு உபாயங்களை வகுத்து அவர்கள் கையாளுகின்றார்கள். அதனூடாக தங்களுடைய குர்திஸ் தேசிய அரசியலை தக்க வைக்கின்றார்கள்.

எங்களுக்கிருக்கும் கேள்வி தமிழ்த் தேசிய அரசியலை எப்படி தக்க வைப்பது எப்படி என்பதுதான். அதை அழித்துவிட்டு போக முடியாது. இவ்வளவு காலமும் நடந்தது ஒரு அழிப்பு நடவடிக்கை. தமிழ் தேசிய நீக்கம் செய்யப்பட்ட ஒரு அரசியலை முன் கொண்டு செல்வதற்கான ஒரு நடவடிக்கையைத் தான் இவ்வளவு காலமும் தமிழ் அரசியல் தலைமை கள் செய்திருக்கின்றன. இந்த நிலைமையை நாங்கள் மாற்ற வேண்டும். இன்று தமிழ் மக்களுக்கான அரசி யல் தீர்வு வராவிட்டாலும் அல்லது தமிழ் மக்களுக் கான தீர்வு கிடைக்காவிட்டாலும் எதிர்காலத்திலா வது தீர்வு கிடைப்பதற்கு தமிழ் தேசிய அரசியலை தக்க வைக்க வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். சுவரில்லாமல் எப்படி சித்திரம் வரைய முடியும்? தமிழ் தேசிய அரசியல் இல்லாமல் எதிர்காலத்தில் எப்படி தீர்வினைப் பெற முடியும்? தமிழ் தேசியத்தை சிதைத்துவிட்டு எப்படி தீர்வு பெற முடியும்? தமிழ் தேசிய அரசியலை தக்க வைக் கின்ற உபாயங்களை நோக்கி நகர்வது தான் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

---

**(11 ஆம் பக்க தொடர்ச்சி)**

வரும் நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழர் தரப்பில் உள்ள கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருந்தனர். எனினும் முன்கூட்டியே 2 முதன்மை வேட்பாளர் களும் எழுத்து மூலமான எந்த ஒரு உடன்படிக்கை யும் அளிக்கப் போவதில்லை என அறிவித்திருந்த நிலையில் இவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகளும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையிலேயே தான் சஜித் பிரேமதாச விற்கு ஆதரவளிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. எனினும் நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலானது ஆள் மாற்றமே தவிர ஒரு அரசியல் மாற்றத்தை கொண்டு வரப்போவதில்லை என்று கூறி கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை புறக் கணிக்கும் தமது கட்சியின் இறுதி முடிவை அறிவித் திருக்கிறது.

எது எப்படி இருப்பினும் 2010 மற்றும் 2015 இல் இடம்பெற்றது போலவே எந்தவிதமான மாற்றத்தையும் கொடுக்காத ஓர் ஆள் மாற்றத்தை விரும்பவில்லை எனில் தங்களுக்கு எது உகந்த முடிவு என அவர்களால் உணரப்படுகின்றதோ அதனை சரிவர இந்த தேர்தலிலே வெளிப்படுத்த வேண்டும். அதன் மூலம் கடந்த இரு தேர்தல்களிலும் இழைத்த தவறை மீண்டும் இழைக்காமல், தமது வாக்களிக்கும் உரிமையை தவறாக பயன்படுத்த வில்லை என்ற ஆத்ம திருப்தியையேனும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது திண்ணம்.



# யாழ். நாகர் கோவில் பாடசாலை விமானக் குண்டுவீச்சு 24 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வநாயகம் ரவிசாந்

யாழ். நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது இலங்கை விமானப்படையின் புக்காரா விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 22.09.2019 முற்பகல் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

மகாவித்தியாலய அதிபர் கு. கண்ணதாசன் தலைமையில் நடந்த நினைவேந்தல் நிகழ்வில் மாணவ, மாணவிகளின் உருவப்படங்களுக்கு உயிர் நீத்தவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை விமானப்படையினரின் கொடூர மான தாக்குதல் இடம்பெற்று 24 ஆண்டுகளாகி விட்ட போதும் அதனால் ஏற்பட்ட வடுக்கள் நாகர் கோவில் மண்ணில் வாழும் மக்கள் மனங்களில் ஆழப்பதிந்து விட்டது.

மேற்படி துயரச் சம்பவம் இடம்பெற்ற போது நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய சி.மகேந்திரம் குறித்த நினை வேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு கண்ணீருடன் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 06.30 மணி யளவில் நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வருகின்ற போது காலை 07.30 மணியளவில் மணற் காட்டில் ஓர் குண்டுச் சத்தம் கேட்டது. அப்போது உந்தப் பக்கம் போகாதேயுங்கோ சேர் என சிலபேர் கூறினார்கள். அப்போது நான் புக்காரா போயிடும், பிள்ளைகள் பாடசாலைக்கு வருவார்கள் எனக் கூறிவிட்டுப் பாடசாலைக்கு வந்து சேர்ந்தேன்.

அன்றைய தினம் சரஸ்வதி பூஜையை நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டியிருந்தமையால் காலையில் எமது கூட்டம் இடம்பெற்றது. அதில் உமாதேவி என்ற சிறுமி மிக அழகாக சில நற்சிந்தனைகளைக் கூறியிருந்தார். அனைவரும் அவரைப் பாராட்டியிருந்தார்கள். பின்னர் முற்பகல் 11.15 மணியளவில் பாடசாலையில் இடைவேளை விடப்பட்டது.

மாணவர்கள் வீடு சென்று மீண்டும் திரும்பி வந்து விட்டார்கள். இதன் பின்னர் எங்களில் சில ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து சரஸ்வதி பூசையை எவ்வாறு நடாத்துவது என்பது தொடர்பாக ஆலோசனை நடாத்திக் கொண்டிருந்தோம். அந்த வேளையில் செம்பியன்பற்றுக்கு அண்மையில் ஒரு குண்டுச் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்திலேயே எங்களுடைய பிள்ளைகள் கதிகலங்கி விட்டார்கள்.

பெற்றோர்கள் அழைக்கும் சத்தம் கேட்டுப் பல மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே போய் விட்டார்கள். இந்தநிலையில் தான் எமது பாட சாலைக்கு நேராக புக்காரா விமானங்களின் ரொக் கெட் தாக்குதல்கள் இடம்பெற்றது. அந்த வேளையில் நானும், எனது ஆசிரியர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் கதி கலங்கி விட்டோம். பாடசாலைக்கு முன்பாக ஓடிய சில சிறுவர்கள் தாக்குதல் காரணமாக அவ்விடத்திலிருந்து தூக்கி வீசப்பட்டனர்.

இந்தநிலையில் தான் நாங்கள் பயந்தவாறு பாடசாலைக்கு மேற்குப் பக்கமாக ஓடினோம். காட்டுக்குள் ஒழித்தால் விமானத் தாக்குதலி லிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியு மென்ற எண்ணத்தில் தான் நாம் இவ்வாறு செயற்பட்டோம். இதன் பின்னர் மீண்டும்

அவ்விடத்தைச் சுற்றிவந்த புக்காரா தாக்குதல் நடாத்தியது. அப்போது எனக்குப் பக்கத்தில் நின்ற பழனி எனும் மாணவர் சேர் பயப்படாதையுங்கோ என்று கூறினான்.

அவன் அவ்வாறு கூறி ஓரிரு நிமிடங்கள் தான் கடந்திருக்கும். திடீரென அவனுடைய தலையிலிருந்து இரத்தம் வரத் தொடங்கி விட்டது. பின்னர் புக்காரா அங்கிருந்து சென்ற பின்னர் மீண்டும் பாடசாலைக் குள் சென்றோம். அங்கு 65 மாணவர்கள் வரையா னோர் காயமடைந்திருந்தனர். இதற்கிடையில் இந்தக் கிராமத்திலிருந்த பெரியோர்களும், கிராமத் தைச் சுற்றியிருந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இணைந்து காயப்பட்ட எமது பிள்ளைகளைத் தமது வாகனங்களில் ஏற்றி மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள்.

19 மாணவர்கள் காயம் காரணமாக உடனடி யாகவே இறந்து விட்டார்கள். இரண்டு மாணவர் கள் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும், அவர்கள் இருவரையும் காப்பாற்ற முடியவில்லை.

நான் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்த போது பல மாணவர்களை இரத்தம் ஒழுகிய நிலையில் படுத்தியிருந்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் இறந்த நிலையில் தான் காணப்பட்டார் கள். ஆனாலும், என்னுடைய பிள்ளைகள் இறந்து விட்டார்கள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

விமானத் தாக்குதல்கள் காரணமாக கொல்லப் பட்ட மாணவர்கள் தொடர்பாக எந்தவித விசாரணை களும் நடாத்தப்படாமல் அவர்களது பெற்றோர் களிடமும், உறவினர்களிடமும் உடல்கள் கையளிக் கப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்டவர்களில் ஒரு சிலரின் உடல்கள் அன்றைய தினமே அடக்கம் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் காரணமாக மூன்று நாட் களாக நான் வீடு செல்லாமல் கொல்லப்பட்ட மாண வர்களின் வீடுகளிலேயே தங்கியிருந்தேன். இதன் பின்னர் மாணவர்களின் வரவின்மையால் இந்தப் பாடசாலை பல நாட்களாக இயங்கவில்லை.

மிகுந்த துயர் மிக்க இந்தச் சம்பவம் இடம் பெற்ற காலப் பகுதியில் இந்தப் பாடசாலையின் அதி

**“19 மாணவர்கள் காயம் காரணமாக உடனடியாகவே இறந்து விட்டார்கள். இரண்டு மாணவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும், அவர்கள் இருவரையும் காப்பாற்ற முடியவில்லை”**

பராக நான் கடமையாற்றியதை நினைத்து இன்று வரை நான் வேதனைப்பட்டுக் கொண்டே யிருக்கிறேன்.

விமானத் தாக்குதல் இடம்பெற்ற போது இந்தப் பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்றவரும், தற்போது பருத்தித்துறைப் பிரதேசசபை உறுப்பின ராகவுமுள்ள ஆ. சுரேஸ்குமார் தாம் சந்தித்த நேரடி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாகப் பொறுப் பேற்ற பின்னர் அனுரத்த ரத்வத்தை எனும் படைத் தளபதியைப் பலாலிப் படைத் தலைமையகத்துக்கு அனுப்புகிறார். இதன்பின்னர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் வகையிலான நில ஆக்கிரமிப்புப் போர் ஆரம்பமாகிறது.

அந்தச் சமயத்தில் ஆனையிறவிலிருந்து கடல் மார்க்கமாகவும் ஒரு படை நடவடிக்கை ஆரம்ப மாகிறது. இதன்மூலம் வெற்றிலைக்கேணியை இலங்கை இராணுவம் முற்றுகையிடுகிறது. இந்த இரண்டு பகுதிகளுக்குள்ளும் காணப்படும் மக்கள் எறிகணைகளுக்குள் அகப்படுகிறார்கள். போர் வலயமாக காணப்பட்ட அந்தவிடங்களிருந்து பாரிய இடப்பெயர்வுக்குள்ளாகிறார்கள்.

குறித்த காலப் பகுதியில் வந்தாரை வாழ வைக்கின்ற கிராமமாகிய எமது நாகர்கோவில் கிராமம் அனைத்துத் தரப்பினரையும் இங்கு வரவேற்கிறது. அந்தவகையில் மயிலிட்டி, காங்கேசன்துறை, திருகோணமலை, ஆனையிறவு,

உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு வருபவர்களுக்கு ஆங்காங்கே முகாம்கள் அமைக்கப்பட்டுக் குடியமர்த் தப்படுகிறார்கள். இந்நிலையில் இவ்வாறு குடியமர்த் தப்பட்ட குடும்பங்களினதும், கிராமத்து மக்களினதும் பிள்ளைகளின் கல்வியின் உறைவிடமாக இந்த நாகர் கோவில் மகாவித்தியாலயம் காணப்படுகின்றது.

அக்காலத்தில் இந்தப் பாடசாலை இட நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பாடசாலை மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்ட போது நான் இங்கு ஐந்தாம் தரத்தில் கல்வி கற்றேன்.

நாகர்கோவில் கிராமத்தைப் பொறுத்தவரை எங்களுடைய பிரதான வாழ்வாதாரத் தொழிலாக கடற்தொழிலே இருந்து வருகிறது. இந்த நிலையில் நாங்கள் இந்தப் பாடசாலையில் படிக்கும் காலத் தில் எமக்கென சில சலுகைகளை எமது ஆசானாக வும், தந்தையாகவும் செயற்பட்ட மகேந்திரம் சேர் வழங்கியிருந்தார்கள். நீங்கள் கடற்தொழிலுக்குச் சென்றாலும் பாடசாலைக்கு வருகை தராமல் நின்றுவிடக் கூடாது. தொழிலுக்குச் சென்றுவிட்டு ஒரு பாடவேளை கடந்த பின்னரும் நீங்கள் பாட சாலைக்கு வரலாம். உங்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

22.09.1995 ஆம் ஆண்டு காலை காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காகப் பாடசாலையின் நடுப் பகுதியில் ஒன்றுகூடுகிறோம். எமக்கு அன்றைய தினம் நான்காம் பாடமான உடற் கல்விப் பாடம் நடைபெறவில்லை. நாங்கள் பாட சாலையின் பிற்பகுதியால் சென்று மரநிழலின் கீழ் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிவமணி அக்கா விடம் சிற்றுண்டிகள், இனிப்புக்கள் வாங்கி உண்டு கொண்டிருந்தோம்.

பலாலி விமான நிலையத்திலிருந்து திருகோணமலை சீனக்குடா பகுதிக்கு இரண்டு புக்காரா விமானங்கள் காலையிலும், மாலையிலும் இராணுவ ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழமை. இந்நிலையில் அன்றைய தினம் பருத்தித் துறைக் கடற்பரப்பில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பெரிய கப்பலொன்று கடற்புலி களால் வழிமறிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டு விமானத் தாக்குதலின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாகர் கோயில் கடற்பரப்பில் கட்டப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தான் அங்கே இரண்டு புக்காரா விமானங்கள் வருகின்றன. அந்தச் சந்தர்ப் பத்தில் நானும் மயிலிட்டியைச் சேர்ந்த எனது நண்பனான மகேஸ்வரனும் பாடசாலை முன்பாக நின்றிருந்தோம். அப்போது வானத்தின் மேலே வட்டமிட்ட விமானங்கள் முதலாவது தாக்குதலை நடாத்துகின்றன.

வழமைக்கு மாறாகப் பெரும் சத்தம் கேட்டமையால் நான் எனது நண்பனை அழைத்து நண்பா...சத்தம் பெரிதாக கேட்கின்றது. நாங்கள் இங்கிருந்து ஓடுவோம் எனக் கூறினேன். நானும், எனது நண்பனும் ஓடிச் சென்று தாக்குதல் நடைபெறப் போகும் புளியமரத்திற்கு கீழே இருக்கிறோம். எனது வீடு அருகாமையிலுள்ள நிலையில் என் அம்மா நேரே ஓடி வருகிறார். அப்போது தம்பி குட்டி இங்கே ஓடிவாங்கோ.... ஓடிவாங்கோ.... என அம்மா அழைக்கிறார்.

அப்போது எனது நண்பனை நோக்கி நீ உன் அம்மாவிடம் ஓடிச் செல்.... நான் என் அம்மா விடம் செல்கிறேன்... எனக் கூறிவிட்டு அம்மா விடம் சென்றுவிட்டேன். அம்மாவிடம் சென்ற பின்னர் அங்கிருந்து சுமார் 50 மீற்றர் தூரம் தான் சென்றி ருப்போம். கோயிலுக்கு முன்னாலுள்ள ஆலமர நிழலின் கீழ் சென்று கொண்டிருந்த போது வித்தியாச மானதொரு சத்தம் காதுகளுக்கு கேட்கின்றது. அப்போது அம்மா என்னைப் பார்த்து "புக்காரா குத்து றான்... குண்டடிக்கப் போகிறான்... உடனே கீழே படுங்கோ..." என்று கூறி என்னை நிலத்தில் படுக்க வைக்கிறார்.

**"நான் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்த போது பல மாணவர்களை இரத்தம் ஒழுகிய நிலையில் படுத்தியிருந்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் இறந்த நிலையில் தான் காணப்பட்டார்கள். ஆனாலும், என்னுடைய பிள்ளைகள் இறந்து விட்டார்கள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை"**

அப்போது தான் நாகர்கோயில் பாடசாலை மீது குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்படுகிறது. நான் படுத்திருந்த ஆலமரத்தின் மீது குண்டுத் துகள்கள் பட்டுத் தெறிக்கின்றன. சிறிதுநேரத்தில் தலை நிமிர்ந்து பார்த்த போது பாடசாலைக்கு முன்பாக நின்றிருந்த புளியமரம் சரிந்து பெரும் புகைமண்டலமாக காட்சியளிக்கிறது. ஐயோ... அம்மா... இவ்வாறான பல ஓலக் குரல்கள் தொடர்ந்தும் இப்பகுதியில் ஒலித்தவாறே இருக்கின்றன.

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் கதி கலங்கிப் போய் நின்றுகொண்டிருந்தோம். அப்போது அம்மா என்னைப் பார்த்து தம்பி... இதிலே அடி விழுந்துற்று, நாங்கள் உடனடியாக ஓடிப் பின்புறம் செல்வோமெனக் கூறினார். அவ்வாறே நாங்கள் அங்கு ஓடிச் செல்கின்ற போதும் அங்கேயும் ஒரு தாக்குதல் இடம்பெறுகிறது. அந்தத் தாக்குதலில் எனது நண்பன் பழனி இறக்கின்றான். மற்றொரு நண்பனான செல்வகுமாரின் தொடைப் பகுதியில் பாரிய காயம் ஏற்படுகிறது. இந்த வலிகளைச் சுமந்தவாறு தொடர்ந்தும் நாங்கள் ஓடுகிறோம்.

அன்றைய தினம் விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஐந்து மாணவிகள் எனது வகுப்பைச் சார்ந்தவர்கள். உமாதேவி என்ற மாணவி எனது நண்பி, என் வீட்டின் அருகில் வசித்தவர். அன்றைய தினம் கொல்லப்பட்ட எனது சக நண்பர்கள், அண்ணாக்கள், தங்கச்சிமார்களின் உடல்களைக் கூட எங்களால் பார்க்க முடியவில்லை. ஏனெனில், அன்றைய நாள் முழுவதையும் நாங்கள் அச்சத்துடன் காட்டுக்குள்ளேயே கழிக்க வேண்டியேற்பட்டது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபரும், தற்போது உடுப்பிட்டி இமையாணன் அ.த.க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி வரும் இ.சிவசங்கர் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

நான் ஆசிரியராகவும், அதிபராகவும் இந்தப் பாடசாலையில் கடமையாற்றியிருக்கின்றேன். இந்தப் பாடசாலையில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் என்னிடம் இடைநிலைப் பிரிவில் கற்றவர்கள். இந்த மாணவர்கள் அனைவருமே மிகுந்த அறிவும், திறமையும் கைவரப் பெற்றவர்கள். இவ்வாறான 21 திறமையாளர்களை எமது பிரதேசம் இழந்து நிற்பது சொல்ல முடியாத வேதனையைத் தருகின்றது.

1993 ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலைக்கு நான் ஆசிரியர் நியமனம் பெற்று வந்த போது மயிலிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும், நாகர்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும் அதிகம் கல்வி கற்று வந்தனர். அப்போது கல்வி கற்ற உமாகாந்தன் என்ற மாணவன் மிகுந்த திறமை மிக்கவனாகத் திகழ்ந்தான். அந்த வகையில் கோட்ட மட்டத்தில் இடம் பெற்ற 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்று புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் இடம் பெற்ற மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக அந்த மாணவனை நானும், இந்தப் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய கௌரிநாதன் சேரும் இங்கிருந்து மாறி மாறி சைக்கிளில் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரிக்கு அழைத்துச் சென்றோம். அந்த மாணவன் குறித்த போட்டியில் இரண்டாமிடம் பெற்று இந்தப் பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்தார்.

உமாகாந்தனைப் போட்டிக்கு அழைத்துச் செல்லும் வழியில் எனது வீட்டிற்கு அழைத்துச் சென்று என் தாயாரின் கைகளால் உணவு உண்ணக் கொடுத்து மாலை வேளையில் போட்டிக்கு அழைத்துச் சென்ற ஞாபகமுண்டு. அந்த மாணவனும் 1995 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை மிகுந்த மனவருத்தத்தைத் தருகிறது.

இந்தப் பாடசாலையில் நடாத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அனைத்து மாணவர்களினதும் பெயர்கள் இப்போதும் எனது ஞாபகத்திலிருக்கிறது. நான் இந்தப் பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய போது கொல்லப்பட்ட மாணவர்களின் உருவப்படங்களைப் பார்த்துவிட்டுத் தான் என் அலுவலகத்துக்குச் செல்வேன். அதேபோன்று பாடசாலை முடிவடைந்த பின்னர் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் சென்ற பின்னர் மாணவர்களின் நினைவுத் தூபியடிக்குச் சென்று வணக்கம் செலுத்திவிட்டுத் தான் வீடு திரும்புவேன். 21 மாணவர்களும் இறந்துவிட்டார்கள் என என்றுமே நான் நினைத்ததில்லை. அவர்கள் இன்றும் எம்முடனேயே இருக்கிறார்கள் எனவும் கூறினார்.

# இருட்டறைக்குள் கறுப்புப் பூனை

தொகுப்பு :- விக்கினேஸ்வரி



“இருட்டறைக்குள் கறுப்புப் பூனையை தேடுவது போல சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் எங்களுடைய தலைவர்கள் 13 ஐத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.”

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் “ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு, ஏன், எதற்காக, தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்” எனும் தொனிப் பொருளிலான மக்கள் மன்றம் யாழ் பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையரங்கத்தில் 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் பங்கேற்று தமிழர் மரபுரிமைகள் பேரவையின் இணைத்தலைவர் நவநீதன் ஆற்றிய உரை வருமாறு,

2015 ஆம் ஆண்டு போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த நிலையிலே மிகுந்த ஒரு நம்பிக்கையோடு எதிர்பார்ப்போடு தமிழ் மக்கள் அந்தத் தேர்தலை சந்தித்திருந்தார்கள். 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களினுடைய அரசியல் பிரச்சனைகளுக்கும் அன்றாடப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக இருக்குமென வலுவாக நம்பினார்கள். அந்த நம்பிக்கை தமிழ் அரசியற்கட்சிகளிடமும் தமிழ் சிவில் சமூகத் திடமும் இருந்திருக்கின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே தான் அந்த தேர்தலுடைய முடிவும் அமைந்தது.

அந்தத் தேர்தலைப் பொறுத்தவரையிலே இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து சிங்கள மக்களினுடைய செல்லப்பிள்ளையாக, வெற்றி வீரனாக, துட்டகைமுனுவாக வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி மகிந்தராஜபக்ச அவர்கள் வெறுமனே 57 இலட்சத்தி 68000 வாக்குகளைப் பெற புதிதாக களமிறங்கி தன்னுடைய சொந்தக் கட்சியிலிருந்து வெளியேறி ஒரு அந்நிய கட்சியோடு கூட்டுச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் 62 இலட்சத்தி 17000 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். அந்த வாக்கு வித்தியாசத்தையும் வாக்குப் பங்கெடுப்பையும் ஆராய்கின்ற போது மகிந்த ராஜபக்ச அவர்கள் சிங்கள மக்களினுடைய 58 வீதமான வாக்குகளைப் பெற்றார். மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெறுமனே 41 வீத சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே பெற்றார். 84 வீதமான தமிழ் முஸ்லிம் மக்கள் அவருக்கு வழங்கிய வாக்குகளின் அடிப்படையிலே அவர் ஜனாதிபதியாகப் பொறுப் பேற்றார்.

அந்த தேர்தலிலே சிறுபான்மை மக்கள் அவர் மீது ஒரு நம்பிக்கையை வைத்திருந்தார்கள் என்பதற்கு அப்பால் எங்களுடைய இனத்தை கொன்றொழித்த எங்களுடைய மக்களை கொத்து கொத்தாக கொலை செய்த இனப்படுகொலையை அரங்கேற்றிய மகிந்த ராஜபக்ச என்ற அந்த தனி மனிதனையும் அந்தக் குடும்பத்தையும் அரசியல் அரங்கிலேயிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் அவருக்கு எதிராக வாக்களித்து மைத்திரிபால சிறிசேன அவர்களை ஜனாதிபதி யாக்கினார்கள்.

எங்களுடைய தமிழ் தலைவர்களே மைத்திரிபால சிறிசேன அவர்களை நெல்சன்மண்டேல ஆகவும் கறுப்புக் காந்தியாகவும் பிரகடனம் செய்தார்கள். ஆனால் ஈற்றிலே என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விடப்பட்டன. தேர்தல் வாக்குறுதிகள் தேர்தலுக்கு மட்டுமானவையே தவிர அது நடைமுறைப்படுத்துவதற்கானது அல்ல என்பது உறுதிப் படுத்தப்பட்டது. நிரூபிக்கப்பட்ட அந்த சூழலிலே நாங்கள் இப்பொழுது இன்னொரு ஜனாதிபதித் தேர்தலை சந்தித்திருக்கின்றோம். தாங்கள் ஏமாற்றப்படப் போகின்றோம் என்று தெரிந்து கொண்டே தமிழ் மக்கள் மீண்டும் ஒரு அரசியல் ஏமாற்று வேலைக்கு தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதிலே சில தமிழ் அரசியற் கட்சிகளுடைய வகிபாகம் காத்திரமானது என்பது மறுப்பதற்கு இல்லை.

இந்த சூழ்நிலையிலே வரலாற்றை இன்னும் சற்றுப் பின் நோக்கி பார்க்கின்ற பொழுது இலங்கை ஜனாதிபதித் தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் தொட்டு இன்று வரை தமிழ் மக்களுடைய வாக்கு களைப் பெற்று ஜனாதிபதியாக வந்த எந்த ஒரு ஜனாதிபதியும் இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த மக்களுக்குமான ஜனாதிபதியாக இருக்கவில்லை. அவர்கள் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர்கள் அல்ல. தானே சளைக்காத பேரினவாதி என்பதை உறுதிப் படுத்துவதிலேயே தங்களுடைய ஆட்சிக் காலத்தை கொண்டு நடாத்தியிருக்கின்றார்கள் என்பது வரலாறு.

இலங்கையினுடைய முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த் தனா என்ன செய்தார்? 1983 ஆம் ஆண்டு இனப்படு கொலைகள், தமிழர்களுடைய கல்விச் சொத்தாக இருக்கக் கூடிய யாழ் நூலக எரிப்பு, இவை எல்லா வற்றிற்கும் மேலாக நாங்கள் இப்பொழுதும் அதனு டைய விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் மகாவலி என்கின்ற கபடத் திட்டத்தினை அறிமுகப்படுத் தியதும் இதே ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தான். 1979 ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்தி சபையை நிறுவி அதனூடாக திட்டமிட்ட முறையிலே கட்டமைக்கப்பட்ட அடிப்படையிலே நிலத்தினுடைய இனப்பரம்பலை மாற்றியமைத்தார். இப்பொழுது அது வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. அவர் தான் சிங்களவர்களுக்கான ஜனாதிபதி என்பதை மிகவும் காத்திரமான முறையிலே பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஆட்சிபீடம் ஏறிய இப் போதைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அவர்களினுடைய தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ, ஊர்காவற்படை என்ற போர்வையிலே மிகப்பரவலாக எல்லைக் கிராமங்களிலே சிங்களக் குடியேற்றங் களைச் செய்தார். கிராமம் கிராமமாக எங்களுடைய மக்கள் கொத்துக் கொத்தாக கொலை செய்யப் பட்டார்கள். கிழக்கிலே பல உதாரணங்கள்: சத்துரு கொண்டான் படுகொலை, வீரமுனைப் படுகொலை, வந்தாறுமூலை படுகாலை, கஞ்சிகுடிச்சாறு படு கொலை, புல்லுமலைப் படுகொலை, கொக்கட்டிச் சோலை படுகொலை என படுகொலைகள் நீண்டு செல்லுகின்றன. அவரும் மிகவும் காத்திரமான முறையிலே தான் சிங்கள பேரினவாதிகளின் தலைவர் என்பதை பதிவு செய்தார். 1993 ஆம் ஆண்டு அவரின் மரணத்திற்குப் பின்னர் மிக சொற்ப காலத்திற்கு பதவி ஏற்ற டி.பி.விஜயதுங்க காலத்தில் கிளாலிக்கடலிலே 35 தமிழர்கள் படகிலே வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இவை எல்லாவற்றையும் விட மிக வேதனையான விடயம், தனது உரையிலே வாக்குமூலம் அளித்தார். “இது சிங்கள பௌத்த நாடு. சிங்கள பௌத்தர்கள் என்பவர்கள் மரம் போன்றவர்கள். அந்த மரத்திலே பற்றிப் பரவுகின்ற கொடிகள் போன்றவர்கள் தான் தமிழர்ளும் முஸ்லீம்களும்” என்று சொன்னார். அங்கே அவர் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி என்பதை விட தான் சிங்களவருடைய ஜனாதிபதி என்பதைப் பதிவு செய்தார். மிகவும் வேதனையான விடயங்கள்.

எங்கள் எல்லோராலும் ஒரு காலத்திலே சமாதானப் புறாவாக சமாதான தேவதையாக வர்ணிக் கப்பட்ட சந்திரிக்கா அம்மையார் என்ன செய்தார்? வடக்கிலே பொருளாதாரத் தடையை மிகவும் இறுக்கமாக்கி எங்களுடைய மக்களை பட்டினிச் சாவிற்கு உட்படுத்தினார். முன்னெப்போதும் இல்லாத வகையிலே வடக்கு கிழக்கிலே விமானத்தாக்குதலை அதிகரித்தார். அதனூடாக நடந்த அப்பட்டமான படு கொலைகள் எங்களுக்கு நினைவு இருக்கின்றது. நவாலிப்படுகொலை மிக முக்கியமானது. நாகர் கோயில் பாடசாலையிலே இடம்பெற்ற படுகொலை. இவ்வாறாக அவரும் சிங்கள மக்களுக்கான தலைவி என்பதைப் பதிவு செய்து கொண்டார்.

இந்தப் பின்னணியில் தான் மகிந்தராஜபக்ச ஜனாதிபதியானார். அவரைப்பற்றி சொல்ல நேரம் போதாது. படுகொலைகளில் உச்சம்தொட்ட இன வாதியாக அவர் தன்னைப் பதிவு செய்தார். அது பன்முகப்படுத்தப்பட்ட படுகொலை நிகழ்ச்சி நிரல். பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டார் கள். திருகோணமலையிலே மாணவர்கள் படு கொலை செய்யப்பட்டார்கள். விமானத் தாக்குதலினூ டாக பல்லாயிரம் மக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். இவையெல்லாம் முள்ளிவாய்க்காலிலே உச்சம் தொட்டு 1,46,700 பேர் கொத்துக் கொத்தாக கொலை செய்யப்பட்டார்கள். எங்களுடைய மக்கள் தமிழர்கள் என்ற அடையாளத்திற்காக வலிந்து காணாமலாக்கப்பட்டார்கள். வன்புணர்வு செய்யப் பட்டார்கள். கடத்திக் கொலை செய்யப்பட்டார்கள். காரணமின்றி கைது செய்யப்பட்டு இன்றும் சிறையிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவை எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாக தலைவராக மகிந்த ராஜபக்ச இருந்திருந்த போதும் விரல் நீட்டி சொல்லப்படுகின்ற குற்றவாளியாக அப்போதைய

# "தாங்கள் ஏமாற்றப்படப் போகின்றோம் என்று தெரிந்து கொண்டே தமிழ் மக்கள் மீண்டும் ஒரு அரசியல் ஏமாற்று வேலைக்கு தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்"

பாதுகாப்புச் செயலாளரும் இப்போதைய ஜனாதிபதி வேட்பாளருமாகிய கோத்தபாய ராஜபக்ச அவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சூழ்நிலையில்தான் நாங்கள் 2015 ஆம் ஆண்டு இந்தச் சூழ்நிலையிலிருந்து விடிவு வேண்டும் என்பதற்காக மைத்திரிபால சிறிசேன அவர்களை ஜனாதிபதியாக்கினோம். ஆனாலும் அவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைதான் என்பதை மிகத் தெளிவாக உறுதிப்படுத்தினார். இதற்கு நீண்ட வரலாறுகள் உண்டு. இரண்டு விடயங்களை மிகச் சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

மஹிந்தவின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும். நான் உங்களுக்கு மீட்பராக இருப்பேன் என்று வாக்குக் கேட்டவர் யாரை சர்வாதிகாரி என்று சொன்னாரோ அவரையே பிரதமராக்கி தானும் ஒரு பேரினவாதி என்பதை உலகத்திற்கு காட்டினார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக வாக்கு கேட்கின்ற பொழுது நான் தமிழ் மக்களுக்கு உண்மையாக இருப்பேன். பொறுப்புக் கூறுவேன். நீதியாக நடப்பேன் என்று வாக்குறுதி தந்து சர்வதேசத்திற்கும் அந்த வாக்குறுதியைக் கொடுத்த அந்த ஜனாதிபதி சர்வதேசத்திலே ஐ.நா மட்டத்திலே பெயர் குறிப்பிடப்பட்டு போர்க்குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட ஒருவர் இந்த நாட்டினுடைய இராணுவத் தளபதியாக நியமிப்பதனூடாக தானும் உச்சபட்ச இனவாதி என்பதைப் பதிவு செய்திருக்கின்றார்.

**வரலாறு எங்களுக்கு எதைச் சொல்லுகிறதென்றால் நாங்கள் யாருக்கு வாக்களித்தாலும் எந்த சிங்கள பெரும்பான்மையினருக்கு வாக்களித்தாலும் அவர்கள் எப்பொழுதுமே இந்த நாட்டினுடைய ஜனாதிபதி என்பதற்கு அப்பால் சிங்கள மக்களின் தலைவர்கள் தாம் என்பதை பதிவு செய்வதிலே மிகவும் காத்திரமாக செயற்படுவார்களே தவிர அவர்கள் எங்களுடைய மக்கள் தொடர்பாக தமிழர்கள் தொடர்பாக கரிசனை கொண்டவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதே நடைமுறை.**

இப்பொழுது ஓரளவு திருப்திப்படக்கூடிய விடயம் நடந்தது. சிவில் சமூகத்தினுடைய ஏற்பாட்டிலே பல கட்சிகளின் பங்குபற்றலோடு கூடி மிகக் காத்திரமான 13 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய நியாயமான ஒரு கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் கூட 13 கோரிக்கைகளும் யாரும் நிராகரிக்க முடியாதவை. அவை சரியானவை. அந்தக் கோரிக்கைகளோடு நாங்கள் பேரம் பேசி இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு காத்திரமான வகிபாகம் இருக்கின்றது என்பதைக் காட்டக்கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடந்த நிலையிலே அந்த 13 கோரிக்கைகளையும் பரிசீலிக்கக் கூடத் தயாரில்லை என்று இந்த வேட்பாளர்கள் அறிவித்து விட்டார்கள்.

ஒருவர் வெளிப்படையாக அறிவித்து விட்டார். இன்னொருவருக்கு வெளிப்படையாக அறிவிக்க முதுகெலும்பில்லை. அவர் சொல்லிக் கொண்டிருக்கின்றார், அதை நாங்கள் பேசுவோம் என்று. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் அவர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடுவது போல எங்களுடைய தலைவர்கள் 13 ஐ தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அது கானல் நீர்! கிடைக்காது!! வார்த்தைகளுக்கு பொருள் கோடல் கொடுப்பதற்காக நாங்கள் தாயாராகிக் கொண்டிருக்கின்றோம். அங்கே எதுவுமே இல்லை.

இந்த சூழலிலே இரண்டு வேட்பாளர்களும் தமிழ் மக்களுடைய தார்மீக கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கு கூடத் தயாராக இல்லாத நிலையிலே இந்த தேர்தல் சிங்கள மக்களுக்கும் சிங்கள பேரினவாதிகளுக்கும் உரிய தேர்தலே ஒழிய தமிழ் மக்களின் நலன் சார்ந்தது அல்ல என்று பதிவு செய்கின்றேன். இந்தப் புறச் சூழ்நிலையிலே நடைபெற இருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு எங்களுடைய மக்களைக் கோருகிறேன்.




இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 10.11.2019 அன்று குரு பிறிண்டேர்சில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.